73

# பாரத மணி

தொடர் முத்து 79 வாரப்பத்திரிகை. 12-5-40

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAY 1940
MADRAS

772



ன்மெண்ட் சோப்புத் தொழிற்சாலையின் ஆராய்ச்சி நிலையம்.

JL
7072.11,N38BM
M40.46.
21064

# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்.

மாலை 4 | ஞாயிறு 12-5-40 விக்ரமஞூ சித்திரைமீ 30உ | முத்து 6

OFFICE OF THE [illegible]
17 MAY 1940
MADRAS

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உலக வர்த்தமானம் | ... ... ... ... | 146 |
| ஹனுமானும் ஆன்ம வித்தையும் | ... ... "கௌண்டின்யன்" | 148 |
| அதிகப்பிரஸங்கம் | ... ... ... ... | 150 |
| இது தெரியுமா? | ... ... ... ... | 151 |
| மங்களகிரியில் பயிற்சி | ... ... ... ... | 152 |
| நாம் பறித்த புஷ்பங்கள் | ... ... ... ... | 153 |
| பொருள்களின் நிலைகள் | ... ... ஆர். கே. விசுவநாதன் எம்.ஏ. | 155 |
| சீர் | ... ... ... "சங்காராம்" | 157 |
| மணிமேகலை | ... ... ... "தாாசு" | 162 |
| சிறுவர் பகுதி | ... ... ... பார்வதி சுப்ரமண்யம் | 164 |
| ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் (2) | ... .. கா. சி. வேங்கடரமணி | 166 |
| புத்தக விமர்சனம் | ... ... ... ... | 167 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.





# உலக வர்த்தமானம்

நார்வே—ஜெர்மனி யுத்தம் குறுக்கே வந்து குதித்ததில் நேச தேசத்தவர்களுக்கு ஓர் புதிய எதிர்ப்பு வந்திருப்பது போல் காணப்படுகிறது. ஜெர்மனி சர்வாதிகாரி அவர் முன் ஜாக்கிரதையாகப் போட்டு வைத்திருந்த திட்டப்படி நார்வே மீது சர்வ பந்தோபஸ்துகளுடன் படை யெடுத்தார் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் பிரிட்டிஷ் துருப்புகளும் அவர்கள் திட்டங்களும் அவ்வளவாக திருப்திகரமாக தங்கள் கடமையைச் செய்யவில்லை என்று வெளிநாட்டு ராஜ தந்திரிகள் கருதுகிறார்கள். நார்வேயிலிருந்து ஜெர்மன் படையை விரட்டி நார்வேயின் அமைதியைப் பாதுகாக்க பிரிட்டிஷ் — பிரஞ்சுக்காரர்கள் செய்தது உத்தேசித்த அளவுக்கு வெற்றிகரமாக முடியவில்லை என்றும் அபிப்பிராயம் காமன்ஸ் அங்கத்தினர்களுக்குள்ளும் இருந்து வருகிறது? "நேசப் படைகள் ஏன் நார்வேயில் சரிவர யுத்தத்தை நடத்தவில்லை" என்று ஒரு கேள்வி கேட்கிறார்கள். "நேச தேசங்கள் எதிரியின் பலத்தைக் குறைவாக எண்ணக் கூடாது. முன் ஜாக்கிரதையாக எதிரிகளின் சூக்ஷ்மப் போக்கையும் கண்டு பிடித்து யுத்தத்தை நடத்தவேண்டும்" என்று கூறுகிறார்கள். அப்படி யுத்தத்தை ஜாக்கிரதையுடன் நடத்தாததனால் தான் நார்வேயில் நேச தேசங்களுக்குத் திருப்தியான அளவுக்கு வெற்றி கிடைக்கவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள்.

பிரிட்டிஷ் தொழிற்கட்சியும் இன்னும் பல பத்திரிகைகளும் நேசதேசப் படையின் அதிருப்திகரமான போக்குக்குக் காரணம் சேம்பர்லின் சர்க்கார்தான் என்று கூறுகின்றன. "சேம்பர்லின் சமாதானத்துக்கே லாயக்கானவர். இதுபோன்ற ஓர் தீவிர யுத்தத்தை நடத்த இன்னும் சாமர்த்திய சாலியான தலைவர் ஒருவர் சர்க்காரை நடத்த வேண்டும்" என்று அவை தீர்மானமாகக் கூறுகின்றன.

சென்ற வாரத்தில் கூடிய காமன்ஸ் சபையில், இது போன்ற தாபிப் பிராயங்களைப்போக்க சேம்பர்லின் நிலைமையை விளக்கி ஒரு அறிக்கை வெளியிட்டார். "நார்வேயின் சேனைத் தலைவர் திடீரென்று அவசரமாக நேச தேசங்களின் உதவியைக் கேட்டார். நேசதேசங்களுக்கு அந்த சமயத்தில் நார்வேயில் தகுந்த விமானப்படை சேர்க்க சாத்தியமில்லை என்று தெரியும். எனினும் நேசதேசங்கள் அதையும் கவனிக்காமல் உதவியளிக்க ஒருமிக்கத் தீர்மானித்தன. இந்த நடவடிக்கை தவறு என்று எவரும் குற்றங்கூறவில்லை" என்று அறிக்கை மூலம் தெரிவித்தார். யுத்தத்தில் நேசதேசங்கள் அடைந்த நஷ்டத்தைப்பற்றிப் பேசும்போது, நேச தேசங்களுக்கு அவ்வளவாக அதிக நஷ்டம் ஏற்படவில்லை என்றும், ஜெர்மனி இதைக் காட்டிலும் அதிக நஷ்டம் அடைந்தது என்றும் கூறினார். அன்றாட யுத்தப் போக்கைக் கவனிக்க இனி சர்ச்சிலுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாகவும் கூறினார்.

சேம்பர்லின் விடுத்த அறிக்கை முக்கியமாகத் தொழிற் கட்சிக்குப் பிடிக்க வில்லை. "இந்த மந்திரி சபை மாறவேண்டும்" என்றுதான் மேஜர் அட்லி கூறினார்.

சேம்பர்லின் அறிக்கை தொழிற்கட்சியினருக்கும் இன்னும் சிலருக்கும் திருப்தியளிக்கா விட்டாலும் சீக்கிரத்தில் ஒன்றும் அரசியல் நெருக்கடி வந்து விடாது என்று ராஜதந்திரிகள் கருதுகிறார்கள்.

ஹிட்லர், நெப்போலியனைப் போல் ஹாலந்திலிருந்து பிரிட்டனைத் தாக்கு



வார் என்று, வாஷிங்கடனில் ஒரு சிலர் கருத ஹேஷ்யங்கள் தென்பட்டதாம். ஹிட்லர்—ப்ரென்னர் சந்திப்பிலேயே முஸோலினியுடன் இத்தீவிர யுத்தம் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும் ஊகிக்கப் படுகிறது.

இத்தாலி பிரிட்டனுக்கு சிலகேள்விகளைப் போட்டு இருக்கிறதாம். "பிரிட்டிஷ் கடற்படைகள் ஏன் மத்திய தரைக்கடலில் அதிகமாகச் சேர்ந்திருக்கின்றன" என்று கேட்கிறதாம். மத்திய தரைக்கடலில் இப்பொழுது காணப்படும் பரபரப்பைப் பார்த்தால் இத்தாலியும் யுத்தத்தில் கலந்து கொள்ளுமோ வென்று சந்தேகிக்கத் தகுந்ததாக இருக்கிறது. ஆனால் இத்தாலியின் போக்கு கண்டுபிடிக்க முடியவில்லை.

ஸ்வீடனுக்கு ஜெர்மனி அபயம் கொடுத்திருக்கிறதாம். ஹிட்லருக்கும் ஸ்வீடிஷ் அரசருக்கும் இடையில் நடந்த கடிதப் போக்கிலிருந்து இது தெரிகிறது என்று செய்தி கூறுகிறது.

## இந்தியாவில்

சென்ற வாரத்தில் உதவி இந்தியா மந்திரி சர் ஒநில் இந்திய நிலைமையைப் பற்றிப் பேசும்போது இந்தியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, வைஸ்ராய் ஒரு முடிவுக்கு வரலாம், என்று கூறினார். இவர் கூறியது இந்திய அரசியல் நெருக்கடியை உடனே போக்கத் தகுந்ததாயில்லை என்று தெரிகிறது. காந்திஜி அதற்குப் பதில் கூறும்போது "இந்தியாவிற்குச் சுயேச்சை யளிக்க வேண்டும் என்று பிரிட்டனுக்கு எண்ணமிருந்தால், அவர்களே முன் வந்து அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட வேண்டும். அப்படிச் செய்யாமல் வீண் பேச்சு பேசிக்கொண்டே இருந்தால இந்திய நிலைமை ஒழுங்குபடாது" என்று கூறினார்.

ஜின்னாவின் பாகிஸ்தானத் தீர்மானத்தைக் குறித்து 'ஹரிஜ'னில் எழுதிய ஓர் கட்டுரையில், அவ்விதத் தீர்மானம் எப்படி இந்தியா ஒற்றுமையைச் சின்னபின்னமாக்கிவிடும் என்பதை விளக்கிக் காட்டினார். "பாகிஸ்தான"த் தீர்மானம் இந்தியாவுக்கு நன்மை யளிக்குமானால், என் முழு ஆதரவையும் அதற்குக் கொடுக்க நான் மறுக்க மாட்டேன்" என்று கூறினார்.

பாகிஸ்தான தீர்மானத்தைக் கண்டித்து பல முஸ்லிம் தலைவர்களும் அறிக்கை வெளியிட்டார்கள். ஆஸாத் முஸ்லிம் மகா நாட்டினர் நேரான போக்கும் உயரிய நோக்கமும், தேசீய முஸ்லிம் தலைவர்களுக்கு மிகுந்த திருப்தி யளித்திருக்கின்றன.

தற்கால அரசியல் நிலைமையைப்பற்றி மிதவாதியான ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் ஹிந்து பத்திரிகையில் ஓர் அறிக்கை வெளியிட்டார். "பாகிஸ்தான் தீர்மானத்தை ஓங்க விட்டால் பேராபத்து. அதை எதிர்க்க நாம் நம் முழு பலத்தையும் உபயோகிக்க வேண்டும்" என்று ஜின்னாவை மட்டந் தட்டினார். அரசியல் நெருக்கடியைத் தீர்க்க காங்கிரஸ் மறுபடியும் பதவி ஏற்க வேண்டும் என்று கூறினார். ஸர் ஜகதீஷ் பிரசாதும் ஸர் என். என். சர்க்காரும் கூறிய மாகாண பிரதம மந்திரிகள் மகாநாடே அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மருந்து என்று ஐயர் அவர்களும் குறிப்பிட்டார். அரசியல் நிர்ணய சபைகூட்டுவது பிரயோஜனப்படாது என்று அவர் தன் அபிப்பிராயத்தை எடுத்துக் கூறினார். காந்திஜியும் காங்கிரஸும் தொண்டர்களைச் சத்தியாக்ரகத்திற்குப் பழக்கி வருவதைக்கண்டு "சட்ட மறுப்பு இயக்கத்தினால் சமாதான பங்கமும் வகுப்புக் கலகங்களும் ஏற்படும் என்பதைச் சென்ற கால அநுபவத்தில் பார்த்திருக்கிறோம்" என்று கூறினார்.

சிவஸ்வாமி ஐயரின் யோசனைகள் ஒன்றும் புதியவை அல்ல என்று காங்கிரஸ் வட்டாரங்களில் கருதுகிறார்கள்.

பம்பாய் நேவல் அக்கவுண்ட்ஸ் ஆர். ஐ. எம் டாக்யார்டில் ஸீனியர் ஸூபரிண்டென்டெண்டாக இருக்கும் ஸ்ரீமான் என். என். ஐயர் அவர்கள் பம்பாய் நகரத்துக்கும் தீவுக்கும் ஹானரெரி பிரெஸிடன்ஸி மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப் பட்டார்.

# ஹனுமானும் ஆன்ம வித்தையும்

"கௌண்டின்யன்"

ராமாயணத்தில் ஸுந்தர காண்டம் ச்ரேஷ்டமானது. அதிலும் முதல் ஸர்க்கம் மிகவும் மேலானது. காரணம் யாது? நூறு யோஜனை விஸ்தீரணமுள்ள சமுத்ரத்தை ஹனுமான் தாண்டுவதை இந்த ஸர்க்கத்தில் கவி வர்ணிக்கிறார். இந்த ஸமுத்திர லங்கனம் ஆச்சரியமான காரியமென்றாலும் மேலே யுத்த காண்டத்தில் ஆயிரம் யோஜனைக்கப்பாலுள்ள ஔஷதி மலையை இரண்டுதரம் அலக்ஷியமாய்க் கொணர்ந்து திருப்பிக்கொண்டுபோய் வைத்த ராமபக்தனுக்கு, இந்த ஸமுத்ரம் "ராமனுடைய வாழைக்கொல்லைக்கு வாய்க்காலாய்" இருந்ததில் யாதொரு ஆச்சரியமுமில்லை. அப்படியிருக்க, ஸமுத்ர லங்கனத்திற்குத் தனிப்பட்ட விசேஷம்என்னவென்று யோசிக்குங்கால், ஹனுமத் ரஹஸ்யத்தை இது வெளிப்படுத்தியதே அதன் மகிமைக்குக் காரணம் என்று விளங்கும்.

ஹனுமான் ராமகாரியத்தில் ஈடுபட்டார். அதை நிறைவேற்றும் சக்தி அவருக்குண்டா என்று பரீக்ஷிக்க எண்ணின தேவதைகள், அவர் ஸிம்ஹிகையென்னும் ராக்ஷஸியை வென்றவுடன் அவருக்குப் பூர்ணமான யோக்யதையுண்டு என்று நிச்சயம் அடைந்தார்கள்.

"யஸ்யத்வேதானி சத்வாரி வானரேந்த்ர யதாதவ ஸ்ம்ருதிர் த்ருதிர் மதிர் தாக்ஷ்யம் ஸ கர்மஸு ந ஸீததி" (எவனிடம் உன்னிடமிருப்பதுபோல் ஞாபகம், அழுத்தம், புத்தி வன்மை, சாமர்த்யம் என்ற குணங்கள் விளங்குகின்றனவோ அவன் எக்காரியத்திலும் பின்வாங்கமாட்டான்) என்று தேவதைகள் ஹனுமானைப் புகழுகிறார்கள். 'யோகம்' என்பது 'கர்மஸு கௌசலம்' என்ற கீதா நியாயப்படி, இந்த நான்கு குணங்களும் வாய்ந்தவனே நிஜமான யோகி என்று நாம் அறியவேண்டும். இந்த குணங்களைச் சற்று ஆராய்வோம்.

'ஸ்ம்ருதி' யென்றால் கேவலம் ஞாபக சக்தியல்ல. பெரியோர் அனுக்ரகத்தாலேயோ பூர்வ ஜன்ம வாஸனையாலேயோ ஆன்மாவின் இயற்கையான நிலையை நினைவூட்டப்பட்டவனே 'ஸ்ம்ருதி'யை அடைகிறான். நாம் "அம்ருதஸ்ய புத்ரா:" என்ற ச்ருதியின் உண்மையை உணர்ந்தாலன்றி ஆன்ம விசாரமென்ற உத்தம தர்மத்தைக் கைக்கொள்ள முடியாது. இக்கருத்தையே ஜாம்பவான் ஹனுமானுக்குத் தன் நிஜ பலத்தை ஞாபகப் படுத்துவதன் மூலம் கவி விளக்குகிறார். ஆகையால் 'ஸ்ம்ருதி' அவசியம்.

ஆனால் அதுமட்டும் போதாது. இடைவிடா ஊக்கமும் எவ்வித இடையூறுகள் வந்தாலும் பொருட் படுத்தாத தைர்யமும் கூடவேண்டும். இக் குணத்தை 'த்ருதி' என்ற பதத்தால் குறிக்கிறார். ராம காரியமாய்ப் பிரயாசைப்படும் தன் நண்பன் புதல்வனான ஹனுமானுக்கு அதிதி ஸத்காரம் பண்ண விரும்பிய மைநாக பர்வதம் வழியில் தோன்ற, அதை ஏதோ விக்னம் எதிர்ப்படுகிறதென்று எண்ணிக் காலால் உதைத்துப் பிறகு அதன் கருத்தை யறிந்து அதன் ஸ்நேஹ புத்தியை மெச்சியும், காரியம் முடியாமல் களைப்பாறுவதில்லையென்று அதனிடம் விடை பெற்றுச் சென்ற ஹனுமானின் 'இரண்டாவது ஆச்சரியம்' என்று தேவதைகளால் கொண்டாடப்பட்ட கர்மாவையே 'த்ருதி'க்கு அத்தாக்ஷியாகக் கவி கூறுகிறார்.

இவ்விதம் நல்ல வாசனையும் மனோதிடமும் இருப்பதோடு 'மதி' என்ற புத்தி விசேஷமும் 'தாக்ஷ்யம்' என்ற பல பராக்ரமமும் ஒருங்கே இருந்தாலன்றி காரியம் கைகூடாது என்றும் தெரிவிக்கிறார். மதியினால் உபாயத்தைத் தேடவேண்டும். சரியான உபாயத்தை அடைவதற்கு அஹங்காரமே பெரிய முட்டுக்கட்டாகையால், சஞ்சலமே குணமாகவுடைய மனதால் உபாயத்தைத் தேடாமல், தெளிவடைந்த புத்தியால் அடையவேண்டும். இதை, நாகமாதாவும் பூஜிக்கத் தகுந்த தேவதையுமான ஸுரஸை தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி ஹனுமானைத் தடுக்குங்கால், அவளிடம் முரட்டு பலத்தைக் காட்டாமல், அவளை வணங்கி, விநயமாகப் பேசி, அவள் சொன்ன மரியாதைக்குக் கட்டுப்பட்டு, யுக்தியினால் அவளிடமிருந்து விடுபட்டு, ஆசிர்வாத பூர்வகமான விடைபெற்றுச் சென்ற ஹனுமானின் 'மூன்றாவது ஆச்சரிய'கரமான காரியம் துலக்கிறது. அதன் பிறகு தன்னைத் தடுத்த ஸிம்ஹிகையோ தெய்வ பலமற்ற கேவலம் தாமஸப் பிரகிருதி யென்று உணர்ந்து 'தாக்ஷ்யம்' என்ற பல பராக்ரமத்தால் இவளை வென்றார். அனுக்ரகம், தீவிரம், புத்தி விசேஷம் இவைகள் உள்ளவர்க்கே பலம் பயனுடைத்தாகும். "நாய மாத்மா பல ஹீனேன லப்ய:" என்ற தத்வத்தின் பிரகாரம் மேற்கூறிய குணங்கள் வாய்ந்தவனே ஆத்மவானாகிறான் என்பது இந்த உத்கிருஷ்டமான ஸமுத்ரலங்கனோபாக்யானத்தின் உட்கருத்து.

இந்த ஸர்க்கத்தில் இன்னும் சில ஆச்சரியமான விஷயங்களும் கவனிக்கத் தகுந்தவை. தர்மத்தின் பாகுபாடுகளை இங்கே காணலாம். பரீக்ஷித்து அனுக்கிரகித்தல் என்னும் தெய்வ தர்மத்தை ஸுரஸை அனுஷ்டிக்கிறாள். ஆசாபாசத்தால் கட்டுண்டு எதையும் அபகரிக்கும் குணத்தால் தூண்டப்பட்டு ஹிம்ஸையோடுகூடின நிக்ரகத்தில் ஈடுபட்ட ஸிம்ஹிகையோ மிருக தர்மத்திற்குச் சான்று. லங்கா நகரத்தைக்காக்கும் அலுவலில் பிரம்ம தேவனால் அமர்த்தப்பட்டவளும், ஹனுமானால் வெல்லப்பட்டுத் தான் வந்த காரியம் முடிந்ததென்றறிந்தவளுமான லங்காதி தேவதை கைக்கொண்ட தர்மத்தையும் (அது இந்த ஸர்க்கத்தில் வராமற் போனாலும்) முன் சொன்ன இருவித தர்மங்களோடு சீர்தூக்கிப் பார்க்கலாம். விருப்பு, வெறுப்பு இரண்டும் இல்லாமல் விதிப்படி நடந்து கருமமே கண்ணாயிருக்கும் முமுக்ஷுவின் தர்மத்தையே இவள் விளக்குகிறாள். இம்மூன்று தர்மங்களுக்கும் மேலானது முக்தனின் தர்மம். நிஷ்காம்யமான லோக ரக்ஷணத்தில் ஈடுபட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் அவ்வழியாமுயற்சியில் அர்ப்பணம் செய்த ஹனுமானே அதன் ஸ்வரூபம்.

இன்னொரு விதமாயும் ஹனுமானுக்கேற்பட்ட இம்மூன்று விக்னங்களையும் உணரலாம். ஸுரஸை விஞ்ஞான ஸ்வரூபிணி — 'தாக்ஷாயணி நமோஸ்துதே' என்று ஹனுமான் அவளைத் துதித்ததிலிருந்தே இது புலப்படும். தம் முயற்சியால் வித்தையை சம்பாதித்து பகுத்தறிவு அடையும் சக்தியை அவள் குறிக்கிறாள். தாமஸகுணமே குடிகொண்ட ஸிம்ஹிகையோ மாயையின் போக்கை சூசிப்பிக்கிறாள். ஹனுமானுடைய நிழலைப் பிடித்து அவரை ஸ்தம்பனம் பண்ணுகிறாள். மாயையும் அவ்வாறே மோஹத்தையுண்டுபண்ணுகிறதன்றோ? லோகானுபவ ஞானத்தை யடைந்து அதனால் கர்வித்த மனிதன் அவசியம் இம்மாயையில் சிக்கித் துன்புறுவான். ப்ரஞ்ஞானம் என்ற விவேகமடைந்த பின்னரே மாயையை வெல்லலாம். அப்படி விடுபட்டவனுக்கும் ப்ராரப்த கர்ம வசத்தால் தர்ம சங்கடங்கள் நேரலாம். இதையே விதியை யனுசரிக்கும் லங்காதிதேவதையோடு யுத்தம் செய்ய நேர்ந்தபோது, ஸ்திரீயைக் கொல்லுவது அநீதியல்லவா என்ற சந்தேகத்தை யடைந்த ஹனுமானின் மனோநிலை விளக்குகிறது. அவள் தன்னையடித்த பிறகே திருப்பியடிக்கிறார். அப்பொழுதும் "ஸ்திரீயாயிற்றே என்ற எண்ணத்தால் அதிகக் கோபத்தைக் காட்டாமல்" அவள் உயிர் தப்பும்படி விட்டுவிடுகிறார். விதிப்படி நடந்தவளானதால் அவளிடம் வைரம் காட்டுவதற்கவசியம் ஏற்படவில்லை. ஸ்ரீ ராமன் சத்துருக்களைக் கோபமில்லாமல் எப்படித் தண்டித்தாரோ அவ்விதமே ஹனுமானும் இங்கே நடந்து தர்ம சங்கடத்தைத் தீர்த்துக்கொண்டார். இதுவே முக்குணங்களையும் கடந்தவர் முறையாகும்.

# அதிகப் பிரஸங்கம்

சூர்பணகை—முடிவு

“இரு கக்ஷியின் ஸாக்ஷியங்களையும் வாதங்களையும் தீர விசாரித்துக் கேட்டறிந்த நாம், ஸகல சட்ட புஸ்தகங்களையும் ஆதாரங்களையும், தலை கீழாகவும் தலை மேலாகவும் புரட்டிப் பார்த்து, கூர்ந்து கவனித்து, ஆழ்ந்து யோஜித்து முடிவாகக் கூறும் தீர்ப்பு என்னவென்றால்,

இச் சூர்பணகை திருச்சி நிலயத்தில் ஆரம்பித்து திருச்சி நிலையத்திலேயே முடிவடைந்தது. இருதரப்பின் வாதங்களும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. ஏனென்றால் சூர்பணகைக்குத் தெலுங்கே தெரியாது. அவள் ராமனுடன் பேசியோ பாடியோ இருந்தால் தமிழில்தான் அவ்விதம் செய்திருக்க வேண்டும். அவ்விதம் பாடியிருந்தால் (சூர்பணகை) நீலாம்புரியில் தாலாட்டு மெட்டிலும், மோஹனத்தில் ராமனுடன் த்வைத கீதமாகவும், முகாரியிலும்தான் பாடியிருக்க வேண்டும். மற்றராகங்களிலோ அல்லது மற்ற பாஷைகளிலோ ஒருநாளும் இருந்திருக்காது. சூர்பணகைக்கு, ரூபத்தை மாற்றிக் கொள்ளும் சக்தி இருப்பதுபோல் குரலையும் மாற்றிக்கொள்ளும் சக்தி உண்டு. ஆனால் காமவல்லியாக வந்த சூர்பணகையின் இனிமையான குரல் ராமனை மயக்கவில்லை. ஏனென்றால் ராமனுக்கு அதிகமாகச் சங்கீதம் தெரியாது. லக்ஷமணனுக்குத்தான் தெரியும் என்பதை தன் ஸாக்ஷயத்தில் லக்ஷமணன் நிதர்சனமாகப் பாடி ரூபித்துவிட்டான். இல்லாவிட்டால் வார்த்தைகளை விழுங்கி சங்கீதத்தை அதிகமாக்குவானா? மேலும் காமவல்லியை ஒன்றும் செய்யாதுவிட்டு அஸல் சூர்பணகையை லக்ஷமணன் மானபங்கம் செய்வானா? சங்கீத விஷயம் இத்துடன் நிற்க ராமன் சூர்பணகையின் குரலில் மயங்காவிட்டாலும் காமவல்லியின் ரூபத்தில் சிறிது மயங்கினான். இல்லா விட்டால், “ஒரு தையல்வரும்” என்பதை மாத்திரம் இரண்டுதடவை சொல்லுவானேன்.

ராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போகப் போகிறான் என்பது ராமனுக்கு முன்னமேயே தெரியும். அதனால்தான் “ராவணன்” என்று சொல்லும்பொழுது அதைக் கோபத்துடன் “ரூவணன்” என்று அழுத்திச் சொன்னான். இது போலவே சூர்பணகையைத்தான் மான பங்கப்படுத்த வேண்டுமென்பதும் லக்ஷமணனுக்குத் தெரியும். ஒரு பெண்ணை இவ்விதம் மானபங்கம் செய்யும் கதி நமக்குக் கிடைக்கப் போகிறதே என்ற கவலை மேலிட, லக்ஷமணன் தட்டுத் தடுமாறிப் பேசினான். சீதைக்குப் பயமும் பொறாமையும் சிறிது உண்டு. காமவல்லியாகவந்த சூர்பணகையின் அழகில் ராமன் மயங்கி விடுவானோ என்ற பயத்தாலும் காமவல்லியிடம் பொறாமையாலும், பிறகு அஸல் சூர்பணகையின் கோர ரூபத்தைக்கண்டு பயந்ததாலும், கிணற்றுக்குள் இருந்து பேசுவதுபோல் சீதை பேசினாள்.

அ. இ. ரே. சட்டம், தி. நி. பிரிவின்படி நாங்கள் இம் முடிவிற்கு வந்தோம்.

“திருச்சி ரேடியோ

4–5–40 இரவு 8-30—8-45”

இவ்விதம் திருச்சி நிலயத்தார் “சூர்பணகையாக” செய்த முடிவைக் கேட்டதும், திருச்சி நிலய அறிவிப்போர் திடுக்கிட்டுப் “பாலையூர்” என்பதற்குப் பதிலாக “மைசூர்” என்றார். ஆனால் சென்னையில் நடக்கும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்ட அனுகூலமாக இருக்கும்படி சரியான ஸமயத்தில் இவ்விதமான தீர்ப்பைக்கூறிய திருச்சி நிலையத்தாருக்குத் தமிழ் நாடு தன் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறது. இதில் அதிகப் பிரஸங்கிக்கும் பங்குண்டு.

“அதிகப்பிரஸங்கி”



# இது தெரியுமா?

2/1064

## புதுமாதிரி சர்க்கா

ஒரு சேர் பஞ்சை 8 மணி நேரத்தில் நூற்கத் தகுந்த புதுமாதிரி சர்க்கா ஒன்றை ஹான்ஸ்ராஜ் வைர்லஸ் என்பவர் கண்டுபிடித்தாராம். சர்க்கா எப்படி வேலை செய்கிறது என்பதை பல காங்கிரஸ் தலைவர்கள் முன் காண்பித்தாராம். நூல் ஒரே கனம் உள்ளதாகவும் அழகாகவும் இருக்கிறதாம். சர்க்காவை உபயோகிப்பதும் வெகு சுலபம் என்று தெரிகிறது. அதன் விலை ரூ. 15. காந்திஜிக்கு இந்த மாதிரி சர்க்காவின் வேலைத் தரத்தைக் காண்பிக்க ஹான்ஸ்ராஜ் வார்தாவுக்கு போவதாகத் தீர்மானித்திருக்கிறாராம்.

* * *

## ஒரு கூட்டத்தினர்

உலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும் சர்க்கார்—குறைந்த செல்வாக்குள்ள சர்க்கார்கள் கூட—அதிகாரத்திலிருப்பது தாங்கள் உற்பத்தி செய்த ஓர் வகுப்பினரால்தான். ஏனெனில் அவ்வகுப்பினரின் முதல் கடமை தங்கள் சர்க்காரை அதிகாரத்திலிருக்கும்படி செய்வதேதான். ரஷ்யாவில் மொத்தம் 180,000,000 ஜனங்களில், சுமார் 25,000,000 அல்லது 30,000,000 பேர் ஸோவியத் அதிகாரத்தினால் “பிழைக்கிறார்கள்.” ஜெர்மனியில் தற்கால நிலையில் இருப்பதைக் கவனித்தால் ஸோவியத்தின் நிலைமை அதிசயிக்கத் தகுந்ததாக இருக்கிறது. ஜெர்மனியில் மொத்தம் 90,000,000 ஜனங்களுள் சுமார் 6,000,000 பேர் நாஜி ஆதிக்கத்தினால் பிழைக்கிறார்கள்; அதுபோல இத்தாலியில் 44,000,000 இத்தாலியர்களுள் 3,000,000 பேர் பாஸிஸ்டு ஆதிக்கத்தால் பிழைத்து வருகிறார்கள். எனவே ரஷ்யாவில் ஸோவியத் திட்டம் நடந்தேறும் வரையில் ஸ்டாலினை ஒழிக்க முடியுமா?

* * *

## ஜெக்கர்களின் ஹாஸ்யம்

“இந்தியாவுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள வித்தியாசம் நன்கு விளங்குகின்றது” என்று ஜெக்கர்கள் ப்ரேக்கில் பரிஹாஸமாகச் சொல்லுகிறார்களாம். இந்தியாவில் எல்லோருக்காகவும் ஒருவர் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கிறாராம். ஜெர்மனியில் ஒருவருக்காக எல்லாரும் உண்ணா விரதம் கையாளுகிறார்களாம்...எப்படி இருக்கிறது?

* * *

## பட்டி விவரம்

1934-35 பட்டிப்படி பிரட்டிஷ் இந்தியாவில் 668 மில்லியன் ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில் 89 மில்லியன் ஏக்கர் காடுகளாக இருக்கின்றன. 115 மில்லியன் ஏக்கர்கள் சாகுபடிக்கு உபயோகமற்றவை; இந்த வருஷத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீர்ணம் 227 மில்லியன் ஏக்கர்கள். அவற்றில் 50 மில்லியன் ஏக்கர்கள் பல நீர்ப்பாசனங்களில்—கிணறுகளால்கூட சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. சாகுபடிக்கு விடப்பட்ட நிலத்தில் 52 மில்லியன் ஏக்கர்கள் அந்த வருஷத்தில் சாகுபடி செய்யப்படாமல் தரிசாக இருந்தன.

* * *

## ஜின்னாவின் பிறப்பு

சென்ற சில நாட்களுக்கு முன் ஒரு முஸ்லீம் தலைவர் “நான் காஷ்மிரி பரம்பரையைச் சேர்ந்தவன்” என்று சொன்னாராம். “என்னைப்போல் இன்னும் பல முஸ்லீம்களும் இந்து மதத்தைவிட்டு இஸ்லாத்துக்கு வந்தவர்களே” என்று மேலும் கூறினாராம். உதாரணமாக “ஜின்னா பாட்டியா வம்சத்தைச் சேர்ந்தவர். ஸர் ஸிகந்தர் ஹயத்கான் ராஜ்புத்திர வம்சத்தைச் சேர்ந்தவர்” என்று எடுத்துக் காட்டினாராம். இதோடு கலந்தாப்போல் “ஸர் மகமத் இக்பால் தான் பிராமண பரம்பரையைச் சேர்ந்தவன் என்று பெருமையடித்துக் கொண்டாரென்று” காந்திஜீ ஒரு சமயம் கூறியதைப் போத்தன் ஜோஸப் நமக்கு எடுத்துக் கூறுகிறார்.




# மங்களகிரியில் பயிற்சி

ஸ்ரீமான் ஜே. எல். பி. ரோச்சி விக்டோரியா கிராம முன்னேற்றத்துக்காகவும் குடிசைத் தொழிலுக்காகவும் சிறிதும் சுயநலமே கருதாது தன் வாழ்நாளைக் கழித்து வருவது மிகவும் பாராட்டத் தக்கது. இந்தியாவில் ஏழு லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. அதிகமாக ஜனங்கள் கிராமத்தில்தான் இருந்து வருகிறார்கள். இதற்குக் காரணம் நமது தேசம் ஓர் விவசாய தேசம் என்பது. எனவே இவ் ஏழு லக்ஷம் கிராமவாசிகளும் தங்கள் தங்கள் வாழ்நாளைக் கஷ்டமின்றிக் கழிக்க பயிர்த் தொழில்தான் புரியவேண்டியதாக இருக்கிறது. நமது தேசத்துக்கு விவசாயத் தொழில்தான்-பெருந்தொழில் அபிவிருத்திக்கு இடமிருப்பினும்—முக்கியமானது. ஆனால் இவ்விவசாயத் தொழிலையும் சரிவர நடத்த அதிக பயன்தரக் கூடிய புதிய சாகுபடி முறையையும், நிலத்துக்குப் போதுமான அளவு உரம் கொடுக்கும் எருக்களையும், புதிய புதிய விவசாயக் கருவிகளையும் கையாள வேண்டும். அப்படிக் கையாண்டாலும் ஒரு வருஷத்தில் கொஞ்ச காலம் விவசாயிகளுக்கு வேலையில்லாததாக இருக்கிறது. இந்த விடுமுறைக் காலத்தை விவசாயிகள் நல்வழியில் கழிக்க காந்திஜியும் இன்னும் பல தலைவர்களும் வற்புறுத்தி வரும் குடிசைத் தொழிலை நடத்த வேண்டும்.

தற்காலம் மெலிந்து கிடக்கும் விவசாயிகளின் நிலைமையைச் சீர் திருத்த, ரோச்சிவிக்டோரியா போன்ற பல தலைவர்கள் முன்வரவேண்டும். பல பயிற்சிச் சாலைகளையும் ஆராய்ச்சிப் பண்ணைகளையும் அமைத்து கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டும்.

இந்த மே மாதம் 5உ முதல் புதுக்கோட்டைக் கடுத்த மங்களகிரி என்னும் ஊரில் கிராமச் சீர்திருத்தத்துக்கும் குடிசைத் தொழிலுக்கும் ஆஸ்தையுள்ளவர்களுக்கு பயிற்சிப் பள்ளிக்கூடம் ஒன்று நடந்து வருகிறது. ரோச்சி விக்டோரியாவால் ஸ்தாபிக்கப்பட்டு இத் துறையில் வெகு விமரிசையாக வேலை செய்துவரும் ஸெயிண்ட் ஜோஸப்ஸ் இன்ஸ்டிட்யூட் கிராம ஆராய்ச்சிக்குத் தகுந்த இடமாக மங்கள கிரியைத் தேர்ந்தெடுத்தது. அங்கு வருஷம் முழுவதும் இன்ஸ்டிட்யூட் நெசவுத் தொழில், பொம்மை செய்வது, தச்சுத்தொழில் முதலிய வேலைகள் செய்து வருவதோடு நிற்காமல் ஒவ்வொரு வருஷமும் கோடையில் வெளியிலுள்ளவர்களுக்காக பயிற்சிப் பள்ளிக்கூடமும் நடத்தி வருகிறது. இந்த வருஷம் ஐந்தாவது தடவையாக இப்பயிற்சிப் பள்ளிக்கூடம் கூடுகிறது. இக் கோடைப்பள்ளிக்கூடத்தின் நோக்கம் "கிராமங்களைச் சீர்திருத்தி அவற்றின் கேவலமான நிலைமையைப் போக்க வேண்டிய தொண்டர்களைத் தயாரிப்பதேதான்." இப்பள்ளிக்கூடத்தில் முக்கியமாக, கற்பிக்கப்படும் பாடங்கள் ஆரம்ப விவசாயம், ஆடு மாடுகளைக் காப்பாற்றுதல், தேன் சேகரித்தல், கிராம ஸ்தாபனங்கள், கிராமப் புத்தக நிலையங்கள் முதலிய கிராம சம்பந்தப்பட்ட பல விஷயங்களைப்பற்றியுள்ளன. பாடங்கள் பரிசோதனைகளுடன் கற்பிக்கப்படுகின்றனவாம். இப்பள்ளிக்கூடத்தின் நோக்கம் பூர்த்தியடையும் பக்ஷத்தில் இந்திய கிராமவாசிகளின் கஷ்டங்கள் சூரியன்முன் பனிபோல் நிவர்த்தியாய்விடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



# நாம் பறித்த புஷ்பங்கள்

## ஸ்வீடன்

ஸ்காண்டிநேவியன் பிரதேசங்களுள் மிகப் பெரியது ஸ்வீடன். அதைப்பற்றித்தான் இப்பொழுது அதிகமாகத் தகவல்கள் கிடைக்கின்றன. டென்மார்க் சுயேச்சையை இழந்த பிறகும், நார்வே யுத்தகளமான பிறகும் மற்ற சுற்றுப் பிரதேசங்கள் அமைதி நித்திய கண்டத்துடன் கூடி இருக்கிறது. எந்த நேரத்திலும் அவற்றின்மேல் ஆக்கிரமிப்பு ஏற்படலாம். பால்டிக் பிரதேசங்களும் தங்கள் போக்கை நிர்ணயித்துவிட்டன. பின்லாந்து போல், லாட்வியா, லத்துவேனியா, எஸ்டோனியா முதலிய நாடுகள் எல்லாம் சற்றேறக்குறைய ரஷ்ய மாகாணங்களாய்விட்டன, நசிக்கப்பட்ட பின்லாந்து மேலுக்குத்தான் நடுநிலைமை நாடாக இருக்கிறது. உண்மையில் வெளி நாட்டுக் கொள்கைகளை நிர்ணயிப்பதில் அத்தேசம் ரஷ்யாவை அனுசரித்துதான் எதையும் செய்யவேண்டியிருக்கிறது. தற்சமயம் ஸ்வீடன் ஒன்றுதான் தன் சுதந்திரத்தை இழக்காமல் ஓர் தனி ராஜ்யமாக இருக்கிறது. ஆனால் ஸ்வீடனின் வாசற்படி வரையில் வந்துவிட்டது. தன் சுதந்திரத்துக்கும், எல்லைக்கும், நாகரீகத்துக்கும், அமைதிக்கும், நஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு விஸனப் படுகிறது ஸ்வீடன்.

ஸ்வீடனுக்கு இதுபோன்ற எதிரிகளின் பயமுறுத்தல் புதிதுதான். அப்பிரதேசம் 1814ம் வருஷ முதல் யுத்தம் என்பதையே அறியாமல் அமைதியாக இருந்துவருகிறது. ஸ்வீடிஷ் மக்களுக்கு வெளிநாட்டு ஒப்பந்தத் தொல்லைகள் கிடையாது. அதன் போக்கே தனி. அதற்கு பெரிய சாம்ராஜ்யமும் கிடையாது; பெரிய சேனையும் கிடையாது; நாடுகளை ஜெயிக்கவேண்டும் என்கிற பேராசையும் கிடையாது. இவைகள் எல்லாம் இருந்தால்தானே மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டும். இவ்வித அமைதி நாட்டில் குடியிருக்கவேதான் அந்நாட்டின் அரசியலமைப்பு எல்லோராலும் ஒருமிக்க நல்லது என்று சொல்லத் தகுந்ததாக இருக்கிறது.

ஸ்வீடனும் டென்மார்க்கும் ஒரு உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த அரசியலமைப்பையுடையன. ஸ்வீடனில் ஒருவன் பிறந்தால் அவன் தேச சர்க்காரின் சொத்தாக ஆகிவிடுகிறான். ஒவ்வொரு பட்டணத்திலும் கிராமத்திலும் குழந்தைகளின் நன்மைக்காகப் பாடுபடும் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. சர்க்காரால் நடத்தப்பட்ட பள்ளிக்கூடங்களிலும் சர்வ கலாசாலைகளிலும் குழந்தைகள் படிக்கிறார்கள். வயது வந்ததும் ஒரு பெரிய சமூக இன்ஷூரென்ஸ் திட்டத்தில் சேருகிறார்கள். ஐரோப்பாவிலுள்ளவைகளுள் முக்கியமான முதியோர் இன்ஷூரென்ஸ் ஸ்தாபனங்களில் ஸ்வீடன் டென்மார்க்கிலுள்ள, கிழவர்களுக்கு ஆதரவு கிடைக்கின்றது. ஸ்வீடிஷ் மக்கள் சர்க்காரால் நடத்தப்பட்ட ரயில்களில் பிரயாணம் செய்கிறார்கள்; சர்க்காரால் நடத்தப்பட்ட டெலிபோன்களை உபயோகிக்கிறார்கள். சுருங்கச் சொல்லப்போனால் ஸ்வீடனில் எங்கும் இல்லாத ஓர் அமைதி குடிகொண்டிருக்கிறது. ஓர் சிறந்த ஜனநாயகம் அங்குதான் நிலவி இருக்கிறது. ஸ்வீடிஷ் மக்கள் மிகவும் சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்கிறார்கள். பத்திரிகைகளில் தலைப்புகள் எழுத ஒன்றும் விசேஷமில்லை; ஏகாதிபத்தியப் போர் இல்லை, முதலாளித்வ அநியாயங்கள் கிடையாது. தொழிலாளிகளின் வேலைநிறுத்தமும் கிடையாது. ஸ்வீடனின் தொழில் உற்பத்தி மிக்க உன்னத நிலையில் இருந்து வருகிறது.

இந்த அமைதியும் தொழிலபிவிருத்தியும் தான் சர்க்காரைச்சரிவரநடத்தும்படிசெய்கின்றன. 1936-ல் கூட்டப்பட்டு இன்னும் வேலை செய்துவரும் ஸோஷலிஸ்டுக் கட்சிதான் நன்றாக வேலை செய்துவருகிறது. தொழில்களை பொது உடைமைகளாக்க வேண்டும் என்பது ஒன்றும் முக்கியத்வம் பெறவில்லை............

தேசத்தின் வருமானத்தில் அதிகப் பங்கு சமூகச் சீர்திருத்தத்துக்கே செலவிடப்படுகிறது. ஆரோக்கியமும், கல்வியும் நன்கு பரப்பப்படுகின்றன. .................. ஜனங்களின் வாழ்க்கைநிலை மிகவும் உயர்ந்ததாகவும் இல்லை; மிகக் குறைந்ததாகவும் இல்லை. எல்லோரும் திருப்தியுடன் வசிக்கின்றார்கள். ................முதலாளி தொழிலாளி வகுப்பினர்களுள் நேசத்தன்மை வளர்ந்து வரு

இறது. 1900லிருந்து முதலாளிகள் சங்கங்களும், தொழிலாளர் சங்கங்களும் வியாபாரச் சங்கங்களும் கூட்டப்பட்டு அந்தந்த வகுப்பினரின் மொத்த லாபத்துக்குப் பாடுபடுவதையே நோக்கமாகக் கொண்டு வேலை செய்துவருகின்றன.

ஸ்வீடிஷ் மக்களுக்கு, எல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் வியாபாரம் நடத்துவது, உகந்ததாக இருக்கிறது. பொது நன்மைக்காக ஸ்வீடிஷ் மக்கள் சேர்ந்து வேலை செய்வதில் சிரத்தை காட்டி வருகிறார்கள். பொருள் உபயோகிப் போரின் கூட்டுறவுச் சங்கம் ஸ்வீடனில் பலத்திருக்கிறது. இவைகள் விலைவாசிகளைக் குறைத்தும் இருக்கின்றன. கக்ஷிகளில் வீரத் தன்மை என்பதே கிடையாது. நாஜீயமோ, அல்லது பொதுவுடைமைத் திட்டமோ ஓங்கவில்லை. 6 வருஷங்களாக அதிகாரத்திலிருந்தும் ஸோஷலிஸ்ட் சர்க்கார் எதையும் புரட்சிகரமாகச் செய்யவில்லை. ஆனால் சமூகச் சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். ஸ்வீடிஷ் சர்க்காரின் போக்கு நிதானமானது. ஜனங்களுக்கு நன்மை பயக்கக் கூடியது. எனவே அங்கு அமைதி நிலவி இருக்கிறது. எல்லா சௌகரியங்களும் இருப்பதால் ஜனங்கள் திருப்தியாகவிருக்கிறார்கள்; கலைகளும், ஆசாரங்களும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் இப்பொழுது நேர்ந்திருக்கும் யுத்த நெருக்கடி கண்டு நடுக்க முறுகின்றன.

—இந்தியன் அபேர்ஸ்

## "மைனாரிட்டிகள்"

வல்லரசுகளால் பிரத்தியேகமாகக் கையாளப்பட்டு வரும் அரசியல் கொள்கைகளுள் மைனாரிட்டிப் பிரச்னை ஒரு பாகம் ......தற்கால அரசியல் உலகத்தில் அடிபடும் மைனாரிட்டிகள், பெரிய வல்லரசுகளின் பரஸ்பர ஆக்கிரமிப்பு மனப்பான்மையால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள். போட்டி போடும் தேசங்களில், இந்த மைனாரிட்டிகள் வலு கொடுக்கப்பட்டு விருத்தி யடைந்து வருகிறார்கள். அதிகார அரசியலில் அவர்கள் கேவலம் பிரயோஜன மற்றவர்கள். அவர்களால் தங்களுக்கும் சுகம் இல்லை எதிராளிகளுக்கும் சுகம் இல்லை. அபாயந்தான். இதுவரையில் சைனாவில் "மைனாரிட்டி"ப் பிரச்னை இருந்ததாக யாரும் கேள்விப்பட்டதில்லை. அங்கும் பல வகுப்பினர்களும், பல ஜாதியினரும் தான் சரித்திர ஆரம்பமுதல் இருந்து வந்தார்கள்! யுனைடெட் ஸ்டேட்ஸில் அரசியல் வாதிகள் கூறும் "மைனாரிட்டிகளே" கிடையாது. கனடாவிலும் ஸ்டேட்ஸிலும் இந்தியர்கள் கூட்டம் தனியாக இருக்கிறது. ஆனால் அங்கு நிறப் பிரச்னை இருந்து வருகிறது. ஆனால் எந்த வெளி ஆதிக்கமும் இந்தக் கூட்டத்தின்மேல் தயை கூர்ந்து அவற்றைச் சீர்திருத்தவில்லை. உண்மை "மைனாரிட்டி" என்பதை யாரும் கேள்விப்பட்டதே இல்லை. ஒரு வல்லரசு அதன் பின்னிருந்து அதற்குத் தூபம் போட்டால்தான் "மைனாரிட்டி" தலை எடுக்கும்.

—எச். ஜி. வெல்ஸ்

## மானேஜ்மெண்ட் மாற்றம்

கௌன்ஸில் அப்ஸ்டேட் அங்கத்தினரும், யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கி லிமிடெட், யுனைடெட் இந்தியா லைப் அண்டு ஜெனரல் இன்ஸுரென்ஸ் கம்பெனி லிமிடெட், ஆகிய ஸ்தாபனங்களின் சேர்மனுமான கனம் எம். வி. டி. எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள், நியூ கார்டியன் ஆப் இந்தியா லைப் இன்ஷுரென்ஸ் கம்பெனியாரின் கோரிக்கைக் கிணங்கி மேற்படி கம்பெனியின் சேர்மன் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்று நியூ கார்டியன் ஆப் இந்திய இன்ஷுரென்ஸ் கம்பெனி மானேஜ்மெண்டார் தெரிவிக்கிறார்கள்.

இதுவரையில் மானேஜிங் ஏஜண்ட்ஸாக வேலை பார்த்துவந்த இந்தியா அண்டர்ரைடர்ஸ் இப்பொழுது தாங்களே தங்கள் வேலையை விட்டு விலகிவிட்டபடியால் மேற்படி கம்பெனியின் டைரக்டர் போர்டே கம்பெனியின் மானேஜ்மெண்டைச் செய்து வருகிறார்கள்.

டைரக்டர் போர்டின் அங்கத்தினர்கள் :—

ஸ்ரீ எம்.வி.டி.எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் (சேர்மன்)

ஸ்ரீ ஒ. ஏ. ஒ. கே. ஆர். எம். அருணாசலம் செட்டியார் அவர்கள்.

ஸ்ரீ கேதார்நாத் காண்டெல்வால் அவர்கள் பி. ஏ. எல். எல். பி.

ஸ்ரீ ஏ.ஆர். ராமநாதன் செட்டியார் அவர்கள்.

ஸ்ரீ எஸ். டி. சதாசிவன் அவர்கள் எம். ஏ.



# பொருள்களின் நிலைகள்

[ஆர். கே. விசுவநாதன், எம். ஏ. அண்ணாமலைநகர்]

பொருள்கள் திட, திரவ, வாயுவென்னும் மூன்று நிலைகளிலே இருக்கின்றன. திடப் பொருள்களெல்லாம் தமக்கென ஓர் குறிப்பிட்ட உருவமும், பருமையுமுடைய கட்டிப் பொருள்களாகும். திரவங்கள் என்பவை நீர்த்தன்மைவாய்ந்தன. இவற்றின் பருமை மாறாதனவாயினும் உருவங்கள் மாறும் தன்மை வாய்ந்தனவாகும். இவைகள் அவற்றை ஏற்றுச் கொண்டிருக்கும் பாத்திரங்களின் வடிவைக் கொண்டிருக்கும். வாயுக்களுக்குக் குறிப்பிட்ட வடிவமுமில்லை, பருமையுமில்லை. அவைகள் அவற்றிற்கு அகப்படக்கூடிய எல்லா இடங்களிலும் பரவும் தன்மை வாய்ந்தது. திரவங்களையும், வாயுக்களையும் பொதுவாக ஓடிகள் என்று கூறப்படும். கட்டிப் பொருள்கள் அவற்றின் உருவைக் குலைக்கும் சக்திகளைத் தடுத்து நிற்கும் இயல்பைக் கொண்டிருக்கின்றன. ஓடிகளுக்கு இவ்வியல்பு கிடையாது. இவ்வேற்றுமையைக் கொண்டு பொருள்கள் திடப் பொருள்களென்றும், ஓடிகளென்றும் பிரிக்கப்படுகின்றன.

பொருள்கள் எல்லாம் சின்னஞ் சிறு அணுக்களாலானவை என்று நெடுநாட்களுக்கு முன்பே விஞ்ஞானிகள் அறிந்தார்கள். மேலும் இவ்வணுக்கள் எல்லாம் நிரந்தரமான இயக்கத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்றும் உணர்ந்தார்கள். முதன் முதலில் பிரபல இயற்கை நூல் விஞ்ஞானியான ப்ரௌன் (Brown) என்பவர்தான் ஒரு அணுதரிசனியைக் கொண்டு இத்தகைய இயக்கத்தை திரவங்களில் கண்டார். அதன் பொருட்டு இந்த இயக்கத்தை ப்ரௌனியன் இயக்கம் (Brownian movement) என்று கூறுவது வழக்கம். இதிலிருந்து இயற்கைக்கு ஓய்வே கிடையாது என்று ஊகிக்கலாம். நிற்க திட, திரவ வாயு நிலைகளின் வேற்றுமைக்கு இந்த அணுக்களின் நெருக்க ஒற்றுமையே காரணமாகும். வாயு நிலையிலே அணுக்கள் நெடுந்தூரம் விலகி இருக்கின்றன. திரவ நிலையிலோ அணுக்கள் சற்று நெருங்கி இருக்கின்றன. திட நிலையில் பின்னும் நெருங்கி இருக்கின்றன. இவ்வாறு இருப்பதால் அணுக்களிடையே பல் வேறு கவர்ச்சி சக்திகள் தொழிற்படுகின்றன. வாயு நிலையில் இத்தகைய கவர்ச்சி சக்திகள் மிகக் குறைவு, வாயு நிலையைக் காட்டிலும் திரவ நிலையில் அணுக்களுக்குள் நட்பு சிறிது அதிகமாயிருப்பதால் அவைகளைப் பாத்திரங்களில் சுலபமாக ஏற்க முடிகின்றது. திட நிலையில் அணுக்களுக்கு இடையே உள்ள நட்பு உச்சி நிலையை அடைந்திருக்கிறது.

திட நிலையில் அணுக்களிடையேயுள்ள இக் கவர்ச்சி சக்திகள் பொருளுக்குப் பொருள் மாறுபடுகின்றன. உதாரணமாக சர்க்கரைக் கட்டி ஒன்றை வெகு சுலபமாக நசுக்கிப் பொடியாக்கி விடுகிறோம். ஆனால் இரும்புத் துண்டு ஒன்றை இவ்வாறு செய்ய முடியவில்லை. ஒரு மரத்துண்டின் மேல் பட்டையை கத்தியைக் கொண்டு வெகு சுலபமாக எடுக்க முடிகின்றது. ஆனால் ஒரு உலோகத் துண்டிலிருந்து இவ்வாறு எடுக்க முடியவில்லை. இதனால் திடநிலையில் பொருள்களின் உருவத்தையோ, பருமையையோ மாற்றுவதற்கு வேண்டுகிற சக்தி வேறுபடுகிறது என்று உணரலாம். பிரயோகித்த பின்னர் சக்தியை நிறுத்தி விட்டால் எல்லாப் பொருள்களும் முன் நிலையை அடைய முயலுகிறது. ஆனால் இம்மீளும் திறமை ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. தவிர பிரயோகிக்கும் சக்தி வரம்புக்கு மிஞ்சி அதிகமாகி விட்டால் பொருள்கள் மீண்டும் முன் நிலையை அடைவதில்லை. திரவங்கள்

அவற்றின் உருவைக் குலைக்கும் சக்தியை எதிர்க்க இயல்பற்றதாக இருக்கின்றன என்று முன்பு கூறினோம். இது முற்றிலும் உண்மையன்று. மிகக் குறைந்தவளவில் இத்தன்மையைத் திரவங்களிடத்தில் காணலாம். உதாரணமாகத் தேன், விளக்கெண்ணெய், தண்ணீர் இவைகளைக் கீழே ஊற்றினால் தேனும், விளக்கெண்ணெயும் நீரைக்காட்டிலும் தாமதத்துடன் செல்வதைக் கவனிக்கலாம். இவ்வேற்றுமைக்கு திரவங்களின் பாகு நிலை (Viscosity) காரணம்.

பொருள்களின் திட, திரவ, வாயு நிலைகள் ஒன்றையொன்று தொடர்ந்தே இருக்கின்றன. திரவப் பொருளாகிய தண்ணீரைக் காய்ச்சினால் வாயுப் பொருளாகிய ஆவியாக மாறுகிறது. குளிரச் செய்தால் திடப் பொருளாகிய பனிக்கட்டியாகிறது. இத்தகைய தன்மை ஏறக்குறைய எல்லாப் பொருள்களிடத்தும் காணப்படுகிறது. நாம் திடப் பொருளாகவே கருதியிருக்கும் இரும்பு, செம்பு முதலிய உலோகங்களும் நன்றாகச் சூடேற்றப்பட்டால் உருகி திரவமாகின்றன. இவ்வாறே பிராண வாயு, நீரகம்(Hydrogen) முதலிய வாயுப் பொருள்களைக் குளிரச் செய்து திரவங்களாகவும், பின்னும் குளிரச்செய்து திடப் பொருள்களாகவும், மாற்றலாம். நிற்க திடப் பொருள் சூடேறுவதால் நேரே வாயுப் பொருளாவதும் உண்டு. கற்பூரத்தைக் காய்ச்சினால் அது திரவமாக மாறாமல் நேரே ஆவியாகி விடும். இது போலவே ஊதிதப் (Iodine) படிகங்களும் காய்ச்சப்பட்டால் புகையாக மாறி விடும்.

இவ்வாறு பொருள்கள் நிலை மாறும் போது அவற்றின் பருமைகளும் மாறுபடுகின்றன. தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாகும்போது நூற்றுக்கு ஒன்பது மடங்கு அதன் பருமை அதிகரிக்கின்றது. இதனால் பனிக்கட்டியின் செறிவு (Density) குறைந்து அது நீரில் மிதக்கிறது. உறையும்பொழுது இம்மாதிரி பருமை அதிகரிப்பது தண்ணீருக்கு மட்டும்தான் ஏற்படுகிறது. இதனால் கற்பிளவுகளில் தங்கி நிற்கும் மழைநீர் குளிர் காலத்தில் உறைந்து விடுகிறது. அதன் பருமை அதிகரிப்பதால் கற்பாறைகள் பிளந்து நொறுங்கி விடுகின்றன. குளிர்ந்த நாடுகளில் வீடுகளுக்குத் தண்ணீர் கொண்டுவர உபயோகப்படும் குழாய்களினுள்ளே இருக்கும் நீர் மாரி காலத்தில் உறைந்து போவதால் அக் குழாய்கள் வெடித்து விடுவது உண்டு. நிற்க தண்ணீர் கொதித்து ஆவியாகும்போதும் இவ்வாறு பருமை வேற்றுமை ஏற்படுகிறது. இப்பொழுது சுமார் 1700 மடங்கு அதிகமாகிறது. இவ் வதிகரிப்பால் விளையும் சக்தியைக்கொண்டுப் பெரிய நீராவி யந்திரங்களை ஓட்டிப் பயன்படுத்தி வருவதை எல்லோரும் அறிவார்கள்.

சாதாரண சூடுகளிலும் திரவங்கள் ஆவியாக மாறுவதை அன்றாட வாழ்க்கையில் நாம் காணலாம். ஒரு சிறு தட்டிலே நீரைப் பெய்து வைத்தால் அது சிறிது நேரத்திலே மறைந்து விடும். நீருக்குப் பதிலாக சாராயத்தை வைத்தால் வெகு சீக்கிரத்திலே மறைந்து விடுவதைக் காண்கிறோம். இவ்வாறு நிகழ்வதற்கு அணுக்களைக்கொண்டு சமாதானம் கூறலாம். பொருள்களிலுள்ள அணுக்களெல்லாம் நிரந்தரமான இயக்கத்தையுடையனவென்றும், அதனால் அவைகள் பலவேறு திசைகளிலே பலவேறு கதிகளுடன் ஓடிக்கொண்டிருக்கும் என்றும் கண்டோம். இவ்வாறு திரவ அணுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும்போது ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும். அதனால் சில அணுக்களின் கதி மிதமிஞ்சிப் போய்விடும். இவ்வணுக்கள் திரவத்தின் மேற்பரப்பிற்கருகிலிருக்க நேரும்பொழுது அவை திரவத்தைவிட்டு வெளியேறி விடுகிறது. இதுவே அணு இயக்க வாதத்தின்படி ஆவியாதலுக்குக் காரணமாகிறது. சூடு அதிகமாகும்போது ஆவியாதலுக்கும் அதிகமாவதற்கும் காரணங் கூறலாம். சூடு உயரும்போது அணு இயக்கத்தின் கதியும் அதிகமாகி, அணுக்களிடையேயுள்ள நட்பு குறைந்து, ஆவியாதல் விரைவாக நிகழ்வது சாத்தியமாகிறது.



# சீர்

"சங்கரராம்"

லக்ஷ்மியம்மாள் மிகவும் நல்ல மாதிரி. ஏழை பாழைகளுக்கு இரங்குவாள்; நல்லது பொல்லாது என்றால், முன் வந்து எல்லா பாரத்தையும் நிர்வகிப்பாள். ஆனால், ஒரு துர்குணம் மட்டும் உண்டு, எப்பொழுதும் தன் கையே உயர்ந்திருக்க வேண்டுமென்பாள். ஆடம்பரத்தில் அநியாயமோஹம். ஆனால் இதையும் சொல்ல வேண்டும்—அந்தம்மாள் ஸ்தானத்தில் இருந்தால் யார்தான் அப்படி யிருக்கமாட்டார்கள்? — சீராய் வந்த பிறந்தகத்து சொத்து, வருஷத்திற்கு நாலாயிரம் ரூபாய் வருமான முள்ளது; புகுந்தகத்தது, வருஷத்திற்கு ஒன்பதனாயிரம் வரும்படி தரும். இன்னும் என்ன வேண்டும்?

ஆனால், அந்தம்மாளுடைய புருஷன் சீதாராமையர் அவளுக்கு நேர் விரோதம். அவர் இருக்கிற இடம் தெரியாது. அந்தக் காலத்தில் ஏதோ கொஞ்சம் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டதோடு சரி. நில புலங்களைச் சுற்றிப்பார்ப்பது, மாடு கன்றுகளுக்குச் சரியாகத் தீனி வைக்கச் செய்து அவைகளைத் தட்டிக் கொடுப்பதோடு சரி அவருடைய உத்தியோகம்.

இவ்விருவருக்கும் கடவுள் அருள் செய்தது ஒரே புதல்விதான். காமாக்ஷி மிகவும் புத்திசாலி. சிகப்பென்று சொல்வதற்கில்லா விட்டாலும், அவள் முகத்தில் பால் வடிந்தது; குணத்திற்குத் தகப்பனாரைக் கொண்டிருந்தாள். அவளுடைய கலியாண விஷயத்தில் மட்டும் சீதாராமையர் தன் இஷ்டத்தை நிறைவேற்றிக் கொண்டார். கமலாபுரம் சுப்பையர் குமாரனுக்கே அவளை விவாகம் செய்ய வேண்டுமென்ற உத்தேசம் அவருக்கு ஆதிமுதல் உண்டு. இதற்கு லக்ஷ்மியம்மாள் சற்று தடை செய்ததையும் அவர் லட்சியம் செய்யாமல், தன் பிடிவாதத்தைச் செலுத்திக் கொண்டார். இதற்குக் காரணம் கமலாபுரம் பத்து மைலுக்குள்ளாகவே யிருந்தது. சுப்பையருக்கு ஒரே மகன் தான். தங்களைப் போல் அவ்வளவு ஆஸ்தி இல்லா விட்டாலும், அவருடைய நெருங்கிய பந்துக்களில் சுப்பையரவ்வளவு பொருள் உள்ளவர்கள் யாருமில்லை. பையனுக்குப் படிப்பு இல்லை யென்ற ஒரு குறைதான் லக்ஷ்மியம்மாளுக்கு. மற்றபடி, உண்மையில் அந்தம்மாளுக்கும் சம்மதம் தான். இப்பொழுது படித்தவர்களெல்லாம் என்ன உத்தியோகங்களைச் சம்பாதித்து விட்டார்கள், அப்படி உத்தியோகம் செய்து பிழைக்கும்படி அவர்களுக்கு என்ன கஷ்டம் வந்துவிட்டதென்று, அந்தம்மாள் ஒருவாறு தன்னைச் சமாதானப் படுத்திக்கொண்டாள்.

நாளடைவில், காமாக்ஷி பருவமடைந்ததும், நிஷேத முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. இம் முகூர்த்தத்தை கமலாபுரக் கிராமவாசிகள் பிரமிக்கும்படி நடத்த வேண்டுமென்று லக்ஷ்மியம்மாள் தீர்மானித்துக் கொண்டாள். ஒரு வாரம் முன்னதாகவே, மும்முறமாக வேலைகள் செய்யப்பட்டன. எண்ணில்லாத விலையுயர்ந்த சீர்கள் தயாரிக்கப் பட்டன. தன் சகாயத்திற்கு, தன் அருமைத் தங்கை சிவகாமியையும் லக்ஷ்மியம்மாள் தருவித்துக் கொண்டாள். சிவகாமிக்கும் லக்ஷ்மியம்மாளுக்கும் எவ்விதத்திலும் வித்தியாசம் கிடையாது. யோசிக்கப்போனால், தமக்கையைவிட தங்கைக்கே தற்புகழ்ச்சியிலும், படாடோபத்திலும் அதிக ஆசை என்று சொல்லலாம். சிவகாமிக்கு, கமலாபுரத்தார் கண்ணால் பாராததும் காதால் கேளாததுமான பக்ஷணங்களை யெல்லாம் செய்து விடவேண்டுமென்று இருந்தது. குடங்குடமாய்ப் பாலைத் தருவித்து,ஊரிலிருக்கும் பெண்டுகளை யெல்லாம் அழைத்து வைத்துக்கொண்டு, இரவும் பகலுமாய் பதினைந்து நாள் சிவகாமி பாடுபட்டாள். முகூர்த்தத்திற்கு புறப்படும்பொழுது,

பக்ஷணக் கூடைகளுக்கே, இரண்டு இரட்டை மாட்டு வண்டிகள் போதாமல் போய்விட்டன.

சீதாராமையர் பழைய சம்பிரதாயங்களை ஒத்துப்போகிறவர். கலியாணப் பயணத்திற்காக, பத்து இரட்டை மாட்டு வண்டிகளை ஏற்பாடு செய்தார். பூட்டிய மாடுகள் குதிரைக்குச் சமானமாக ஓடக் கூடியவை. அவர் சார்பான பந்துக்களும், லக்ஷ்மியம்மாளின் பிறந்தகத்தவர்களும் சேர்ந்து விட்டால், கும்பலுக்குக் கேட்கவேண்டியதில்லை. குழந்தை குட்டிகளின் கூச்சலும், வேடிக்கையும் விளையாட்டும், பெரியவர்கள் ஒருவரை யொருவர் பரிகாசம் செய்துகொள்வதும், எல்லாம் ஒரே சந்தடிதான். இக் கூட்ட மெல்லாம் ஒருவாறு வண்டிகளி லடைந்து, உல்லாச கோஷத்துடன் வண்டித்தொடர் கமலா புரத்தை நோக்கி நகர்ந்தது.

கமலாபுரம் சுப்பையர், பெருந் தன்மைக்குத் தகுந்த முன் யோசனையும் உள்ளவர். தன் சம்பந்தியின் பந்துக்கள் ஒரு பட்டாளமென்று அவருக்குத் தெரியும். அதற்காக, அக்கிரஹாரத்திற்கு சுமார் நூறுகஜம் தூரத்தில் தனியாயிருந்த பெரிய பண்ணையார் வீட்டை அவர்கள் விடுதிக்காக ஏற்பாடு செய்தார். பெரிய பண்ணையார் வீடு ஒரு பெரிய பங்களாவைப் போன்றது. பிழக்கடையில் அதற்கு ஒரு பெரிய தோட்டமும் கிணறும் உண்டு. மற்றிரண்டு பக்கங்களிலும் வயல்கள். பண்ணையைச் சேர்ந்தவர்கள் வருஷத்திற்கு ஒரு முறை வந்து ஒருவாரம் தங்கினால், அதுவே அதிகம். மற்ற நாட்களில் விளக்கு வைப்பதற்குக் கூட ஆளில்லாமல் அது தவித்தது. சுப்பையர் பெரிய பண்ணை வீட்டை துப்பரவு செய்து, வெகு நேர்த்தியாக ஆக்கிவிட்டார்; எங்கும் பாயும் ஜமக்காளமுமாய்ப் பரப்பிவிட்டார். மூலைக்கு மூலை நாற்காலிகளும் மேஜைகளும் கண்ணாடிகளுமே. இவ்வளவுநாளாய் இருளடைந்து கிடந்ததற்கு வட்டியும் முதலுமாய் திருப்பிக் கொடுப்பது போல, வீடெங்கும் விளக்குகள் எரிவதற்கும் ஏற்பாடு செய்தார். பிறகு, கட்டிக்காத்து, இட்ட வேலையை நொடியில் செய்வதற்கு ஏராளமான ஆட்கள் வேறு!

இவைகளை யெல்லாம் கண்ட லக்ஷ்மியம்மாளுக்கும் சிவகாமிக்கும் ஆனந்தம் பொறுக்க முடியவில்லை. ஒருபுறம், தாங்கள் இவ்வளவு கௌரவத்திற்கு அர்ஹமுள்ளவர்களென்ற எண்ணம் பிறந்தது. மற்றொருபுறம், தங்கள் கை சற்று தாழ்வுதானோ வென்ற சந்தேகமும் உண்டாயிற்று. இச் சந்தேகம், சுப்பையர் எடுத்து வைத்திருந்த ஜவுளிகளை அவர்கள் பார்க்க நேர்ந்தபோது அதிகரித்தது.

உடனே, லக்ஷ்மியம்மாளும் சிவகாமியும் ஏகாந்தமாக சற்று ஆலோசித்தனர். சபையில் நாலுபேர் மெச்சிக்கொள்ளும்படி செய்ய சிவகாமிக்கு ஒரு உபாயம் தோன்றிற்று. லக்ஷ்மியம்மாளும் அதை ஆமோதித்தாள். இரவு ஏழுமணிதானிருக்கும். அங்கிருந்த ஒரு ஆட்காரன் மூலமாய் இருபது புதுக்கூடைகளை லட்சிமியம்மாள் தருவித்தாள். மறுநாள் சாயங்காலம் ஏழுமணிக்குத்தான் முகூர்த்தம். அதற்குள் எவ்வளவோ காரியங்கள் செய்யலாம். அவர்கள் பக்ஷண சாமான்களை பிரத்யேகமாய் ஒரு அறையில் வைத்திருந்தார்கள். இவ்வறை வீட்டின் வடகோடியிலிருந்தது. அவ்வறைக்கப்பால் வயல்கள்தான். பூர்வகால வழக்கப்படி பத்திரத்தை உத்தேசித்து அதற்கு ஒரு ஜன்னல்கூட வைக்கவில்லை. விளக்குவைத்துப் பார்த்தா லொழிய எந்த சாமான் எங்கிருக்கிறதென்று கண்டுபிடிக்க முடியாது. "உக்கிராண" அறைக்கு இதுதான் எடுத்தது என்று லட்சிமியம்மாளுக்குப் பட்டது. ஒரு காலத்தில் அவ்வறை முழுவதும் பெருச்சாளி வளைகள் நிறம்பியிருந்தன. அவைகளையெல்லாம் சுப்பையர் செப்பனிட்டிருந்தார். அப்படியிருந்தும் ஒரு மூலையில் கண்ணுக்குத் தெரியாமல் ஒரு புதுவளை ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

சிவகாமியும் லக்ஷ்மியம்மாளும் இவ்விருட்டறைக்குள், கைக்கு அகப்பட்ட பழம்புடவைகள், கந்தல், கிழிசல்களை





"நான் இப்பொழுது ஸன்லைட் சோப் உபயோகிக்கிறேன் — அது துணிகளை நன்றாகச் சுத்தம் செய்கிறது.

என் பக்கத்து வீட்டுக்காரியின் துணிகள் எப்பொழுதும் என் துணிகளைவிட எவ்வளவோ சுத்தமாய் இருந்தன. அவள் ஸன்லைட் சோப் உபயோகிப்பது எனக்குப் பிறகு தெரியவந்தது. 'ஸன்லைட் சோப் உபயோகிக்க ஆரம்பித்த பிறகுதான் துணிகளைச் சலவை செய்தாற்போல் இருக்கிறது. ஏனென்றால் சோப்பில் உண்டாகும் நுரைதான் அழுக்கைப் போக்குகிறது. இந்த நுரையை ஸன்லைட் சோப் ஏதேஷ்டமாகக் கொடுக்கிறது' என்று அவள் கூறினாள்.

நானும் என் துணிகளில் இப்பொழுது ஒரு பெரிய மாறுதலைக் காண்கிறேன். ஸன்லைட் சோப்பின் உதவியால் அவை பளிச்சென்ற வெண்மையுடன் விளங்குகின்றன."

ஸன்லைட் சோப்




தூய்மையான தாவர எண்ணெய்களை மட்டும் கொண்டு இந்தியாவில் தயார்செய்யப்படுவது

LEVER BROTHERS (INDIA) LIMITED S. 14-50 TM.

எல்லாம் எடுத்துக் கொண்டு புகுந்தனர். பிறகு, கதவை உட்புறமிருந்து தாழ்ப்பாளிட்டுக்கொண்டு, விளக்கு வெளிச்சத்தில் ஒவ்வொரு கூடையையும் பாதிக்குமேல் பழந்துணிகளால் நிரப்பினர். பலகாரங்களெல்லாம் சமமாக எல்லாக்கூடைகளிலும் நிரப்பப்பட்டன. கூடைக்குப் பாதிக் கந்தைவைத்திருந்ததால், கூடைகள் பலகாரங்களால் நிரம்பி, சரிந்து போவது போலக் காணப்பட்டன. கூடைகளின் தொகையும் அதிகரித்தது? இரு சகோதரிகளும் வெகு திறமையாக சீக்கிரத்தில் தாங்கள் நினைத்த காரியத்தை நிறைவேற்றிவிட்டனர். அவ்வளவு கூடைகளையும், பக்ஷணங்களோடு "குந்தாக்குள்ளி" யாய்ப் பார்க்கும்போது, அவர்களுக்கேவியப்பாயிருந்தது. முறுக்குக் கூடையொன்றுதான் பாக்கியிருந்தது. முறுக்கென்றால் முறுக்கா?—நாலு கையகலம்! அவர்கள் ஒரு கூடையை இரண்டாக்கினார்கள். ஆனால், கந்தை போதாமையால் ஒரு கூடை காலியாய் மிஞ்சிவிட்டது. அதில் போடப்பட்ட ஒரு பழஞ் சுங்கிப் புடவை கால் பாகத்திற்குத்தான் வந்தது. இன்னும் கிழிசல்களைத் தேடுவதற்குள், சம்பந்திகள் இவர்களைச் சாப்பாட்டுக்கு அழைக்க வந்ததுபோலத் தெரிய வந்தது. உடனே அவர்கள் அந்தக் காலிக் கூடையைக் கதவோரமாய் வைத்துவிட்டு, வெளியே வந்து கதவைப் பூட்டினர். அன்றிரவு, சம்பந்திகள் செய்த விருந்தையும் ஆசார உபசாரத்தையும் பார்த்து, லக்ஷ்மியம்மாளும் அவள் சகோதரியும் திகைத்தார்கள்.

மறுநாட் காலையில், எட்டு மணி சுமாருக்கு கலிகாலத்திற்கு ஏற்றவாறு, திடீரென்று இடியும் மின்னலோடு பெரும் மழையும்பிடித்துக்கொண்டது. பதினோறு மணி வரையிலும் ஓயவில்லை. அநேக காரியங்கள் தடைபட்டன. ஸ்நான பானம் செய்து சாப்பிடுவதற்கே ஒரு மணியாய் விட்டது. பிறகு, வருவாரோடும் போவாரோடும் பேசுவதில் கொஞ்சம் காலம் கழிந்தது. லக்ஷ்மியம்மாளுக்கு வழக்கம் போல் மத்தியானம் சாப்பிட்டதும் ஒரு ஐந்து நிமிஷங்களுக்குக் கூடத் தலையைச் சாய்க்க முடியவில்லை.

இதற்குள் மணி நாலாய்விட்டது. இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் சம்பந்திகள் அழைக்க வந்துவிடுவார்கள். லக்ஷ்மியம்மாள் மிகவும் சோர்ந்து இருந்தாள். முறுக்கு அடுக்கவேண்டிய கூடையை மறந்தேவிட்டாள். ஆனால், சிவகாமிமறக்கவில்லை. வேலையோடு வேலையாய் ஒரு கிழிந்த வேஷ்டியைத் தேடிப்பிடித்து, அத்தோடு இன்னும் சில கிழிசலைச் சேர்த்து, "உக்கிராண" அறைக்குள் தனியாகச் சென்று, கதவுமூலையிலிருந்த கூடையில் போட்டாள். அதன் மேல் தெரிந்த வெளிச்சத்தில் முறுக்குகளை அடுக்கிவிட்டாள். பக்ஷணக் கூடைகள் வெளியேற்றப்பட்டபொழுதுதான், லக்ஷ்மியம்மாளுக்கு திடுக்கென்று ஞாபகம் வந்தது. அப்பொழுது சிவகாமி தமக்கையை சற்று அப்புறம் அழைத்துச் சென்று, விஷயத்தைத் தெரிவித்தாள். இப்பொழுது, இருந்தாற்போலிருந்து, லக்ஷ்மியம்மாளுக்கு மற்றொரு பயம் பிறந்தது.

"அவாளுக்குத் தெரியாமல், பக்ஷணத்தை எப்படி, அவாகிட்டே சேர்க்கிறது?" என்றாள் அவள்.

"அந்தக் கவலை உனக்கு எதுக்கு, அக்கா? எல்லாத்தையும் நான் பாத்துக்கிறேன். சம்பந்தியம்மா, தங்கம்னா தங்கம். அந்தம்மாவுக்குத்தான் கூடமாடச் செய்ய யார்இருக்கா? இப்போ சபையிலே சோபிக்கிறதைப் பாரு நீ" என்று அவள் சமாதானப்படுத்தினாள்.

விளக்கு வைக்கும் சமயத்தில், ஆரவாரத்துடன் பெண்வீட்டுக்காரர்கள் வரவேற்கப்பட்டு சென்றனர். அச்சீர்களைப் பார்த்து கிராமத்து பெண்டுகளெல்லாம் மூக்குமேல் கைவைத்தனர். பக்ஷண தினுசுகளைப் பற்றி அவர்கள் பேசிக்கொள்வது லக்ஷ்மியம்மாளின் காதில் விழாமல் போகவில்லை. அவள் மனது பூரித்துப் பொங்கிற்று.

சுப்பையர் செலவுக்கு யோசிப்பவரல்ல. அதுவும் நல்லசமயத்தில் தனது ஒரு குமாரனுக்கு உபயோகப்படாத பணம் எதற்கு என்பது அவருடைய கருத்து.





கலியாணக் கூடம் வெகு அற்புதமாய் ஜோடிக்கப்பட்டிருந்தது. விதவிதமான புஷ்பங்களின் மாலைகளும், விலையுயர்ந்த வாசனைத்திரவியங்களும் தங்கள் மணத்தால் அங்கிருப்பவர்கள் மனதைக் கவர்ந்தன. யௌவன தம்பதிகள் மணைகளில் உட்கார்ந்ததும், "ஜே, ஜே" வென்று குப்பல் கூடிவிட்டது. தம்பதிகளுக்கு முன் சீர்களெல்லாம் வரிசை வரிசையாய் வைக்கப்பட்டன. புரோகிதர்கள் மந்திரம் சொல்லத்தொடங்கினர். தெருவிலிருந்த மேளக்காரர்கள் உள்ளே வந்து, கலியாணக்கூடத்திற்கு எதிரேயிருந்த தாழ்வாரத்தில் உட்கார்ந்துகொண்டு வாத்தியம் வாசிக்கத் தொடங்கினர். நாயனக்காரன், நாயனத்தை "பீ, பீ" என்று சரிப்படுத்தினான். தவில்காரன் "டம்! டம்!" என்று அடித்து தவலைச் சரிப்படுத்தும்போது, ஒலியின் வேகம் பலமாயிருந்தது. இதனாலே முறுக்குக் கூடையிலிருந்து ஒரு முறுக்குகூட கீழேசரிந்து வருவதுபோல இருந்தது. ஆனால் இதை யாரும் கவனிக்கவில்லை. பிறகு மேள வாத்தியம் வலுக்கவே, கோபுரமாய் அடுக்கி வைத்திருந்த முறுக்குகள் 'தப தப' வென்று சாய்ந்து விழுந்தன. கூடையினுள்ளிருந்து, ஒரு பெரிய நல்ல பாம்பு "புஸ், புஸ்" என்று கொண்டு வெளியே வந்தது! மூலைக்கு ஒருவராய்ச் சிதறி ஓடினார்கள். எங்கும் ஒரே நடுக்கம், ஒரே கூச்சல். நல்ல வேளையாய் அந்தப் பாம்பு வாசற்பக்கம் ஊர்ந்து சென்றது. அதற்கு வேகமாய் ஓடக்கூட முடியவில்லை. இரை பலமாய்த் தின்று இருக்கவேண்டும். அதை அடிக்கலாமா கூடாதா வென்று சில தைரிய சாலிகள் யோசிப்பதற்குள், அது பக்கத்திலிருந்த வேலிக்காலில் நுழைந்துவிட்டது.

உள்ளே, பாம்பு கூடையிலிருந்து வந்தபொழுது ஒரு பழம் புடவையையும் இழுத்துக்கொண்டு வந்தது. அதில் ஒரு பாதி தரையிலும் மற்றொரு பாதி கூடையிலும் இருந்தது. கூடைக்குப் பழம் புடவை எப்படி வந்ததென்று எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். ஒருவனுக்கு இன்னொரு பாம்பு இருக்குமோ வென்ற சந்தேகம் வந்தது. இச் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும்பொருட்டு, சுப்பையர் மருமகன் தண்டபாணி ஒரு கம்பை யெடுத்து, மெதுவாய் முறுக்குகளைக் கீழே தள்ளினான். கூடை முழுவதும் பழந்துணியாயிருந்தது. அவன் ஒரு கோமாளி. அவற்றை யெல்லாம் ஒன்று விடாமல் கம்பினால் எடுத்தான். ஒரு வண்ணான் மோளி குவிந்துவிட்டது. "இதென்ன வேடிக்கை!" என்று சொல்லிக்கொண்டு, கம்பைக் கீழே போட்டுவிட்டு, மெதுவாய் இன்னொரு கூடையை சோதித்தான்—உள்ளத்திற்குள் அவனுக்கும் பயமே. அதிலும் பாதிக்குமேல் கிழிந்ததுணிகள்தான். மற்றும் இரண்டை எடுத்துப் பார்த்தான். அதே கதைதான். அவனுக்குச் சிரிப்புப் பொறுக்க முடியவில்லை. கந்தைக் குவியல்களின் நடுவில், இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு, இடி இடியென்று சிரித்தான்.

இச்சமயத்தில் லக்ஷ்மியம்மாளின் முகம் எவ்வாறு இருந்ததென்பதைக் குறித்து பேசுவது தருமமல்ல.



# " மணிமேகலை "

' தராசு '

உயர்ந்த தத்துவம் கொண்டது மணிமேகலையின் சரித்திரம். ஆனால் இக் கதை டாக்கிக்குப் பொருத்தமானதா என்பது சந்தேகம்தான். புத்தியைச் சிரமப் படுத்திக் கெட்டிக்காரத் தனமாக இதை டாக்கிக் கதையாக மாற்றலாம். ஆனால் இதைத் தயாரித்தவர்கள் அம்மாதிரி ஒன்றும் சிரமப்படுத்திக் கொள்ளாமல் மிகவும் ஸுலபமாகக் காரியத்தை முடித்து விட்டார்கள். எப்படி என்றால் கேட்பானேன்? பாட்டுதான். பாட்டுப்பாடிப் படத்தை முடித்து விட்டார்கள்.

வசனம், இம்மாதிரியான படத்தில் எம்மாதிரியாக இருக்கக் கூடும். ஏதோ வந்தார்கள், பேசினார்கள். ஆனால் பேசின வரை சரியான தமிழில் சரியானபடி பேசினார்கள். கதையைச் சரியானபடி எழுதியிருந்தால் ஸ்வாரஸ்யமான வசனமெழுத முடியும். அது இல்லாதபொழுது வசன மெங்கிருந்து வரும்?

பாட்டுகள் வேண்டிய மட்டும் இருக்கின்றன. கர்நாடகம், ஹிந்துஸ்தானி எல்லாம் இருக்கின்றன. ஹிந்தி, தமிழ் படக் காப்பிகளும் உண்டு. ஆனால் மணிமேகலை பாடிய பாட்டுகளெல்லாம்—ஒன்றிரண்டு தவிர—மிகவும் நன்றாக இருக்கின்றன. "சங்கீத பூஷணிகள், கோகில கானங்கள்" முதலியவர்களை மணிமேகலை தூக்கி அடித்துவிட்டார். இனிமையான குரலில் பாவம் ததும்பப் பாடி மனதைக் கவருகிறார். பாட்டு, பாட்டு என்று அடித்துக் கொள்ளும் சங்கீதப்ரியர்கள் (டாக்கி) இந்தப் படத்தைப் பார்த்துத் திருப்தி அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

படத்திற்கு அநேகம் பாட்டுகள் அவசிய மில்லை. சில பாட்டுகள் மிகவும் நீளமாக இருக்கின்றன. உதய குமாரன் பாடியே இருக்க வேண்டாம். அவர் பாடிய மூன்று பாட்டுகளும் உயிரற்று இருக்கின்றன. மணிமேகலை, தோடி ராகப் பாட்டிலும், ராகமாலிகையில் காம்போஜியிலும் பிலஹரியிலும் சிறிது ச்ருதியை விட்டு விலகி இருக்கிறார். இவைகளை மறுபடி எடுத்திருக்கலாம்.

படப்பிடிப்பு ஒரு நிதானமாக இல்லை. சில இடங்களில் மிகவும் நன்றாக இருக்கிறது. சில இடங்களில் மிகவும் மோசமாக இருக்கிறது. சில இடங்களில் பரவாயில்லை என்று சொல்லும்படி இருக்கிறது. இரண்டு மூன்று 'காமெராமென்' வேலை செய்ததுபோல் இருக்கிறது. 'லைட் கன்டின்யுடி' ஒரு இடத்திலும் சரியாக இல்லை.

ஒலிப்பதிவு திருப்தி கரமாக இல்லை. சங்கீத ப்ரதானமான இப் படத்திற்கு வேண்டிய அளவு கவனம் செலுத்தப்படவில்லை.

நடிப்பு என்பது இப் படத்தில் பாட்டுதான். பாட்டுகளை அதுவும் மணிமேகலையின் பாட்டுகளை படத்திலிருந்து எடுத்து விட்டால் படத்தில் வேறொன்றும் கிடையாது. ஹாஸ்ய மென்று காட்டப் படும் "புருஷன் மனைவி சண்டை" வேண்டுமாகில் சிலருக்கு ரஸமாக இருக்கலாம். தலைப்பாகையுடன் தோன்றிய உதய குமாரன், முதலில் பார்ப்பதற்கு அழகாக இருந்தார். பிறகு தலைப்பாகையில்லாமல், ஜிப்பாவும் உள் சட்டையும் (மணிமேகலையின் காலத்தில் இவைகளெல்லாம் உண்டு!) போட்டுக் கொண்டு தோன்றியது ஸஹிக்க முடியவில்லை. விக்கைவையாவது (wig) ஸரியாக வைத்துக் கொண்டு வரக் கூடாதா. சோழ அரசனைப் பற்றி ஒன்றும் கேட்காதீர்கள்.

எடிடருக்கு இப்படத்தில் அதிக வேலையில்லை. எல்லாம் சங்கீதம் தானே. ஆனால் இருந்த வேலையையும் சரியாகச் செய்யவில்லை. பாட்டுகளில் மூன்று நான்கு சரியானபடி படத்துடன் "ஒலி இசைக்கப் படவில்லை. பாட்டுகளில் போடப்பட்டிருக்கும் "insert" களின் 'கன்டின்யுடி' ஒரு இடத்திலும் ஸரியாக இல்லை.





டைரக்டர் கஷ்டப்படாமல் காரியத்தை முடித்து விட்டார். நாடகங்களில் காக்ஷிகளுக்கு இடையில் விடப்படும் திரைக்குப் பதிலாக ஃபேட் அவுட் (Fade out) வைப், (Wipe) டிஸ்ஸால்வ் (Dissolve) இவைகளை உபயோகித்து, நாடகத்தைப் படமாக எடுத்து விட்டார். இதில்தான் தன் கைவரிசையைக் காட்டி இருக்கிறார் டைரக்டர். மணிமேகலை கடற்கரையில் மயங்கிக் கிடக்கிறாள். எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருக்கிறது. கடலின் ஒலி கூட கிடையாது. பிறகு தேவதையுடன் மணிமேகலை பேசும்பொழுது, மறைந்திருந்த கடல் ஒலி திடீரென்று பிரஸன்னமாகிறது. இது போலவே மணிமேகலை கூட்டத்தில் வரும்பொழுதும் கூட்டத்தின் சப்தம் ஆரம்பத்தில் ஒளிந்திருந்து விட்டு பிறகு வந்து சேர்ந்து கொள்கிறது. மணிமேகலை ஏழு நாள் மறைந்திருந்தது, சரியாக ஸ்தாபிக்கப்படவில்லை. காய சந்திராவின் உபகதையிலிருந்து ஒரே ஒரு நாள்தான் கழிந்தது போல் தோன்றுகிறது. ஸ்மசானத்தில் எலும்புகளைக் கண்டதும் மணிமேகலை பயந்து நடுங்குகிறாள். ஆனால் ஸாவதானமாக அங்கு உட்கார்ந்து கொண்டு பாட்டுப் பாடுகிறாள். ஆபரணங்களைக் களைந்தெரிந்த மணிமேகலை, தன் தலைப் பின்னலைப் பாடிக்கொண்டே அவிழ்க்கிறாள் பாதிப் பின்னல் அவிழ்ந்ததும் கை வேலை செய்ய மறுக்கிறது. ஏன்? சவுரி வைத்த இடம் வந்ததாலா? ஆம் சவுரியின் முடிப்பும் தெரிகிறது. ஊரில் பஞ்சம் சாப்பாட்டிற்குத்தான். இளநீர், தேங்காய் இவைகளுக்கு அல்ல. சோழதேச வாசிகள் ஒரு கவள அன்னத்தால் பசிதீர்ந்தார்கள். இல்லாவிட்டால் மணிமேகலை இரண்டாவது கவளம் அன்னம் போட்டிருக்கமாட்டாளா? சோழ தேசத்தில் எரிமலை உண்டு. இந்திர விழாவை நிறுத்தவே சோழ தேசத்தில் ப்ரளயம் உண்டாகிறது. எரிமலை எரிகிறது. எரிமலை ஏது? கைவசமிருக்கும் "லாஸ்ட் டேய்ஸ் ஆஃப் பாம்பி" என்ற ஆங்கிலப் படத்திலிருக்கும் எரிமலைக் காக்ஷி வீணாகலாமா? ஆகையால் சோழ நாட்டிலும் எரிமலை வந்தது. இம்மாதிரி குறைகளைக் கவனித்துத் திருத்துவது அனாவசியச் சிரமந்தானே. இக்குறைகளை நீக்கிப் படமெடுத்தால் இதைப் புகழப் போகிறவர் யார்?

---



சுமங்கலியில் மிஸ் சூரிய குமாரி


புதியப் பிரசுரங்கள்!

வ. எஸ். பி. ஐயர் ஐ. ஸி. எஸ்.
எழுதிய புதிய நவீன
முப்பெரு வீரர் ரூ. 2

திரு. வி. கலியாணசுந்தரனார்
இயற்றிய
இந்தியாவும் விடுதலையும் ரூ. 2

பிரதிகளுக்கு:
ஸ்வேதாரண்ய ஆசிரம
புத்தகசாலை,
295, லிங்கசெட்டி தெரு, மதராஸ்.




# கூடா நட்பு

[பார்வதி சுப்ரமண்யம், மங்களூர்]

குழந்தைகளே உங்களுக்கு, உங்கள் அப்பா, அம்மா, அல்லது வீட்டிலேஇருக்கிற பெரியவர்கள் கண்ட குழந்தைகளோடும் சிநேகம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று உங்களைக் கண்டித்தால், சில சமயம் உங்களுக்குக் கோபம் வருகிறதல்லவா? தகாத சிநேகம் பிடித்து, போகக் கூடாத இடத்துக்குப் போய், செய்யக் கூடாத காரியங்கள் செய்து,கஷ்டத்துக்கு உள்ளான நரியண்ணை கதையை உங்களுக்குச் சொல்லட்டுமா?

ஒரே ஒருகாட்டிலே ஒரு நரி இருந்தது. அதுக்குசாமர்த்தியம்போதாததால் தனக்கு வேணுமான ஆகாரம் சம்பாதித்துக்கொள்ள திறனற்று இளைத்து இருந்தது. அது ஒரு நாள் இரைக்கு அலைந்து கொண்டிருக்கும் போது, கொழு கொழு வென்று கொழுத்திருந்த ஒரு பூனையைக் கண்டது. அதைப் பார்த்ததும் நரிக்கு "ஐயோ நாம் ஆகாரம் தேட வகை தெரியாமல் முழிக்கிறோமே, இந்த பூனைமட்டும் இப்படித் தின்றுகொழுத்திருக்கிறதே. இதோடு சிநேகம் செய்து கொண்டாலாவது நமக்கும் இரை யகப்படாதா" என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனுடன் உறவு கொண்டாடியது ...னது.

நரி பூனையைப் பார்த்து "பூனையாரே, வந்தனம். நான் தங்களை ஒன்று கேட்க வேணும் போல் இருக்கிறது. கேட்டால் நீங்கள் பதில் சொல்லுவேளா" என்று கேட்டது.

அதற்குப் பூனை "அதற்கென்ன நரியப்பா, எனக்குத்தெரிகிற மட்டும் சொல்லுகிறேன்; தாராளமாய் கேள்" என்றது.

உடனே நரி தான் இரையகப்படாமல் வருந்தி இளைத்திருப்பதைப் பற்றித் தெரிவித்து விட்டு, பூனைமட்டும் இப்படிக் கொழுத்திருப்பதன் ரகசியத்தைத் தனக்குத் தெரிவித்தால் தானும் அதனுல் பலனடைய விரும்புவதாகச் சொல்லிற்று.

அது கேட்ட பூனை, தான் ஒரு பணக்காரர் வீட்டில் அவர்களெல்லோரும் இரவில் தூங்கப் போன பிறகு சத்தம் செய்யாமல் நுழைந்து, அவர்கள் வைத்திருக்கும் பால், தயிர், நெய், வெண்ணெய், முதலியவைகளை எப்படித் திருடித் தின்று வருகிறது என்ற விவரத்தைச் சொல்லிற்று.

அதற்கு நரி தன்னையும் அந்த வீட்டுக்கு அழைத்துப் போகும்படி பூனையைக் கெஞ்சினது.

பூனை தான் அழைத்துப் போவதற்கு தடையில்லை என்றும், ஆனல்





நரி புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் எச்சரித்தது. பூனை நரிக்குச் சொன்ன புத்திமதியாவது: "பகலில் வெளியே தலை காட்டக் கூடாது இரவில் வீட்டிலுள்ளார் தூங்கப் போன பிறகு சத்தம் செய்யாமல் சமையல் அறைக்குப்போய் கிடைத்ததைச் சாப்பிட்டு விட்டு அவ்விடம் உள்ள பரணில் ஒளிந்திருக்க வேண்டும். அதோடு பரணில் இருக்கும்போது நரி தன் குரலைக் காட்டக் கூடாது ஒரு நாள் இரவு நரியைப் பூனை அந்த பணக்காரர் வீட்டுக்கு அழைத்துப் போய் சமையலறையும் அது ஒளிந்திருக்க வேண்டிய பரணையும் காட்டிக் கொடுத்தது.

நரியும் பூனையின் புத்தி மதிப்படி நடந்து கொண்டு வயிறார உண்டு சுகித்திருந்தது. ஆனாலும் அதற்கு இப்படித் தனியில் சிறை யிலிருப்பது போல் வசித்து வருவது கஷ்டமாகத்தான் இருந்தது.

அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு ஆகாராதிகள் தினம் களவு போய்க் கொண் டிருப்பதன் மர்மத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. நரி அவ்வளவு தந்திரமாகத் திருடி வந்தது.

இப்படி யிருக்கையில், ஒருநாள் இரவு ஒரு கூட்டம் நரிகள் அந்தப் பணக்காரனின் வீட்டுக் கொல்லைப் புறமாக வந்து ஊளையிடத் தொடங்கின. இதைக் கேட்டதும், பரண் மேலிருந்த நரிக்கு உற்சாகமேற்பட்டு "நாம் ஒரு வீட்டுக்குள் ஒளிந்து வசித்து வருகிறோம்" என்ற ஞாபகமே இல்லாமல் அதுவும் தன் இனத்தோடு சேர்ந்து ஊளையிட ஆரம்பித்தது.

இரவில், வீட்டுக்கு உள்புறத்தில் நரி ஊளையிடும் சப்தம் கேட்கவே, வீட்டிலுள்ளவர்கள் விழித்தெழுந்து விளக்குங் கையுமாக தேடத் தொடங்கினர்கள். சத்தம் பரண் மேலிருந்து வரவே, பரணில் ஏறிப் பார்த்தார்கள். நரி அவர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டது.

வீட்டாருக்குந் தங்கள் சாப்பாட்டு சாமான்கள் களவு போய்க் கொண்டிருப்பதன் ரகசியம் தெரிய வந்தது. ஆகவே, அவர்கள் ஆத்திரம் தீர அந்த நரியை இடுப்பொடிய புடைத்துத் துரத்தி விட்டார்கள். நரி நொண்டிக் கொண்டு தன் இனத்தாரிடம் போகும் வழியில் பூனையைச் சந்தித்துத் தன் விபத்தைத் தெரிவித்தது. அதற்கு பூனை கொஞ்சம் கூட இரக்கம் காட்டாமல், "அப்போதே சொன்னேனே நரி ராஜா, அப்படியும் அகப்பட்டுக் கொண்டாயே நரி ராஜா" என்று கேலி செய்தது.

இனி, நம் இனத்தாரிடமாவது ஏதாவது அன்பான சொல் கிடைக்காதா என்று நரி கூட்டத்துள் நுழைந்தது. மற்ற நரிகள் இதன் இடுப்பு ஒடிந்திருப்பதைப் பார்த்துக் காரணம் கேட்டன. நரியும் தன் வரலாற்றைச் சொன்னது. உடனே, அவைகள் கூடாத பேரோடு கூடலாமா? கூடினலும் கூடங்கள் மாடங்கள் ஏறலாமா? ஏறினலும், நம் குலவேதங்களை தங்கள் ஓதலாமா? ஓதினல் மோசங்கள் நாசங்கள் தானே வரும்" என்று புத்தி சொல்லிக் கொடுத்தன.

நரியும் அந்த புத்தியைக் கேட்டு நடந்து கொண்டது.

# ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் (2)

[கா. சி. வேங்கடரமணி]



பாடம் 5.



**யானை**
**ஒட்டகை**
**குரங்கு**

**மான்**
**சிவிங்கி**
**கங்காரு**

இவைகளும் காட்டிலிருக்கும் மிருகங்கள்தான். ஆனால் இவைகள் இதர ஜீவன்களை அழித்துப் பிழைக்கும் இனத்தைச் சேர்ந்தவை அல்ல. இலையையும் தழையையும் புல்லையும் தின்று ஜீவிக்கும் பிராணிகள்.

மணி, நாயும் குரங்கும் சேர்ந்து வரும் காட்சியை நீ எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா? பார்த்திருந்தால் அதைப்பற்றி ஓர் கட்டுரை எழுதிக்கொண்டு வா.

குரங்கின் சேஷ்டைகளையும், அதன் ஆடல்களையும் கவனித்துப் பார்த்து எந்த விஷயத்தில் குரங்கு இதரப் பிராணிகளைவிட உயர்ந்தது, எந்த விஷயத்தில் தாழ்ந்தது என்று சொல்லு.

மணி, முதல் முதல் நீ யானையை எந்த வயதில், எவ்விடத்தில், எப்படிப் பார்த்தாய்? பார்த்த உடன் உனக்கு என்ன தோன்றிற்று? நீ யானையின்பேரில் ஏறி உட்கார்ந்திருக்கிறாயா?

யானையின் பிறப்பு ஓர் உத்தமப் பிறப்பு. அது மிருகங்களுள் மிகவும் சிரேஷ்டமானது. அறிவும், சாந்தமும், மிக்க பலமும், உழைப்பும் பொருந்தினது யானை.

யானையின் அறிவை விளக்கிக் காட்டும் கதைகள் பல உள. அவைகளை எல்லாம் நீ தெரிந்துகொள்ள வேண்டும்.

மானைப்பற்றி நீ எனக்கு ஒர் கட்டுரை எழுதிக்கொண்டு வா.

# புத்தக விமர்சனம்

**Songs of Devotion** by K. Vaidyanathan with an introduction by K. S. Venkataramani. [ 'Sri-ketan' Kosapet, Vellore.]

'பக்திப் பாடல்கள்' கவி தாகூரின் "கீதாஞ்சலி" முறையில் எழுதப்பட்டுள்ளன. தினசரி வாழ்க்கைச் சம்பவங்களைக் கவிதைக் கண்ணுடன் நோக்கி, இனிய எளிய முறையில் வெளியிடும் வகையில் ஆசிரியர் குறிப்பிடத் தக்க வெற்றியடைந்துள்ளனரென்றே கூறவேண்டும். கவிதையன்பர்கள் ஆசிரியரது உண்மைப் பக்திப் பரவசத்தையும், வசனச்-செய்யள் சமைக்கும் கவித்திறனையும் போற்றுவர்.

'ஸ்ரீ ரமண சந்நிதி முறை'—பாரத்வாஜிமுகவைக் கண்ண முருகனார். [கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்.
விலை ரூ. 2-8-0.]

பக்திப் பரவசம் பெருக்கெடுத்து இப்பாமாலையாய் உருவெடுத்துள்ளது எளிதில் எவருக்கும் விளங்கும். நடை தெளிவான செம்பாகமானது. முகவுரையாளர் கூறுவதுபோல், திருவாசகத்தைத் தழுவிய செய்யுட் போக்கு. பக்தருள்ளத்தை இதன் நடையும் பொருளும் கொள்ளை கொள்ளும் வெற்றியை 'இரண்டாம் பதிப்பின்' அவசியத்திலிருந்து அறியலாம்.
நீ. ரா.

**Indian States and Responsible Government** by Mr. K. R. R. Sastry, M.A., M.L., Reader, Law Department, University of Allahabad. 1939; Price Rs. 5/-(Sh 7/6.)

இந்திய ஸமஸ்தானங்களும் பொறுப்பாட்சியும் ஆங்கிலத்தில் ஸ்ரீ. கே. ஆர். ஆர். சாஸ்திரி. எம்.ஏ., எம்.எல்., எழுதியது. விலை ரூ. 5.

ஸ்ரீ. கே. ஆர். ஆர். சாஸ்திரி என்பவர் அலஹாபாத்து சர்வகலாசாலையிலே சட்டப் போசிரியராக இருப்பவர். அரசாட்சி முறைகளையும் அவற்றிற்கு மூலாதாரமான சட்டங்களையும் பரிசீலனை செய்து உயர்தரப் பட்டங்கள் பெற்றவர். இவர் சமஷ்டி சம்பந்தமாயுள்ள சட்ட திட்டங்களையும் சுதேச மன்னர்களுக்கும் இந்தியச் சக்கரவர்த்திக்குமுள்ள ஒப்பந்தங்களையும், அவ்வக் காலங்களில் சட்ட நிபுணர்களும் அரசாட்சி நிர்வாஹஸ்தர்களும் இவற்றிற்குச் செய்துள்ள வியாக்கியானங்களையும், பிரபல ஸமஸ்தானங்களிலேயுள்ள பிரத்யேகமான அரசாட்சி முறைகளையும், சமீபத்தில் ஸமஸ்தானாதிபதிகளும் திவான்களும் சுயாட்சி சம்பந்தமாகக்கூறிய உறுதிமொழிகளையும் சீர்திருத்தச் சட்டங்களையும், எல்லாம் ஐயந் திரிபறப் பரிசீலனை செய்து ஸமஸ்தானங்களைப் பலவகையாகப் பிரித்து அவ்வவற்றிற்குரிய சீர்திருத்தங்களையும் எடுத்துக்கூறி, சமஷ்டியே இந்திய நாட்டுக்கு ஏற்றது என்னும் உண்மையையும் அதனையே லக்ஷ்யமாகக்கொண்டு ஸமஸ்தானாதிபதிகளும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் பிரிட்டிஷ் சர்க்காரும் ஒத்துழைக்க வேண்டிய அவசியத்தையும் நன்கு விளக்கியுள்ளார்.

இந் நூலிலே சட்டரீதியாக பிரிட்டிஷாரின் நிலைமையும் ஸமஸ்தானங்களின் நிலைமையும் ஆராய்ந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் பிரதிநிதியாகவே இந்தியச் சக்கரவர்த்தி ஸமஸ்தானங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டார் என்னும் வியாக்கியானமே நேரானது என்று ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்கள் கூறியுள்ளதை ஆசிரியர் அங்கீகரிப்பதும் கவனிக்கத் தக்கது.

தெளிவாகத் தெரிந்துகொள்ள இயலாதபடி சிக்கல்கள் பலவற்றையுடைய விஷயத்தை ஊன்றி ஆராய்ந்து தம்முடைய நிர்ணயங்களைத் தெளிவாகக் கூறும் ஆசிரியரின் திறமை கொண்டு இந்நூல் சிறப்புறுகின்றது.

வே. நாராயணன்.

கிருஷ்ணகாந்தன் உயில் [பங்கிம் சந்தரர் நூல்—10 : வங்காளி மூலத்தி லிருந்து பண்டித ஸ்ரீ சைல்தா தாசாரியாரும் ஸ்ரீ த. நா. குமார சுவாமி, பி. ஏ., அவர்களும் மொழி பெயர்த்தது அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. சாதா பைண்ட் ரூ. 1-8. காலிகோ ரூ. 1-12.]

வங்காளி பாஷைக்குத் தந்தை ஸ்தானத்தை வகித்து அதனை மேம்படுத்திய பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயரை அறியாதார் யார்? அவரே வங்காள நவீனத்தைச் சிருஷ்டிசெய்தவர். அவருடைய நூல்களிற் சிலவற்றை காலஞ் சென்ற மஹேசகுமார சர்மா தமிழிலே மொழி பெயர்த்து தமிழ் மக்களுக்கும் அவரது பெருமைகளை விளக்கியுள்ளார். ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸரின் உபதேச மொழிகளையும் கோஷ்ராய் முதலிய பிரமுகரின் நாடகங்களையும், பங்கிம் தாகூர் முதலியோரின் கதைகளையும் கற்பதற்கேனும் தமிழ் மக்கள் பலர் வங்காளி பாஷையைப் பயில வேண்டியது அவசியம். இவ்வவசியத்தை உணர்ந்து இம்மொழியிலே நன்கு பயின்று ஸ்ரீ குமார சுவாமி அவர்கள் பல அரிய வங்காளி நூல்களைத் தமிழிலே மொழி பெயர்த்து வருகிறார்.

பங்கிம் பாபுவின் நவீனங்களுள் 'கிருஷ்ண காந்தன் உயில்' உயர் பதம் பெற்றது. வங்க தேச வாழ்க்கையை உள்ளபடி சித்தரித்துக் காட்டுவது. ஆசிரியரின் கற்பனு சக்தியையும் சொல் வன்மையையும் விளக்குவதற்கு இந் நூலினும் சிறந்த உதாரணம் இல்லை யென்றே சொல்லும் படியான பெருமை வாய்ந்தது இது என்பதை இவ்வினிய மொழி பெயர்ப்பினை வாசிப்போர் அனைவரும் ஒப்புக்கொள்வர். தற்காலத்திலே பிரசுரிக்கப்படும் மொழி பெயர்ப்பு நூல்கள் பல மூல மொழியினின்று ஹிந்தியில் மொழி பெயர்க்கப் பெற்று ஹிந்தியினின்றும் தமிழிலே மொழி பெயர்க்கப்படுகின்றன. அவை போலாவது, இந்நூல் தமிழிலும் வங்காளியிலும் தேர்ச்சி பெற்ற ரஸிகர்களாலே நேராக மொழி பெயர்க்கப் பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது.

வே. நாராயணன்.

## வரப்பெற்றோம்

பாலர் விருந்து :—ஆசிரியர் : என். எஸ். அருணசல ஐயர்.

**Athithya Kaya Kalpa**:—by T. S. Ramanujam M.A., L.L.B. (Lond); All India Tutorial College, Luz, Mylapore.

**Mysore and Modern Industries**:—Issued by the publicity officer to the Government of Mysore.

**Village uplift in Mysore**:—Issued by the publicity officer to the Government of Mysore.

**Memoires**:—Issued by the Madras Library Association.


Books by K. S. VENKATARAMANI

| | Rs. A. |
|---|---|
| 1. Jatadharan and other stories | 1 8 |
| 2. Paper Boats | 1 0 |
| 3. Kandan, the Patriot | 2 0 |
| 4. Cat-guts by Manjari S. Iswaran | 0 12 |
| 5. Three men of Destiny by A. S. P. Iyer I.C.S. | 3 0 |

ஸ்ரீ வேங்கடரமணி நூல்கள்

| | ரூ. அ. |
|---|---|
| 1. [illegible]பக்தன் கந்தன் | 1 0 |
| 2. முருகன் ஓர் உழவன் (கிருஷ்ண குமாரி மொழிபெயர்ப்பு) | 1 8 |

பங்கிம்சந்திரர் நூல்கள்

| | ரூ. அ. |
|---|---|
| 3. விஷவிருக்ஷம் (த. நா. குருஸாமி மொழிபெயர்ப்பு) | 1 8 |
| 4. துர்க்கேசநந்தினி (கு. ப. ராஜகோபாலன் மொழிபெயர்ப்பு) | 1 4 |

**SVETARANYA ASHRAMA BOOK - SHOP,**
**295, Linghi Chetti Street, G. T. Madras.**



பரசுராம சித்த ஔஷதாச்ரம[illegible]

மதராஸ் பிராஞ்சு : 59-A, லாய்ட்ஸ் ரோட், [illegible]

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔ[illegible] யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்[illegible] சர்ம தோஷங்களுக்கும் (குஷ்ட முன்பட) ஔஷதங்கள் இ[illegible]

முப்பு குரு சேர்ந்த "சித்த எண்ணெய்" — இது சர்வரோக நிவாரண[illegible] ஔஷத சாலையின் பிரதான வைத்தி[illegible] தாமும் மதருவில் 1உ முதல் 10உ வரை[illegible]ருப்பார்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ் : ஸாரதா ஸ்டோர்ஸ், [illegible]டி.
ஸ்டாக்கிஸ்ட்ஸ் : அப்பா அண்டு கம்பெனி, [illegible]ராஸ்.
மீனாட்சி ஸ்டோர்ஸ், தேவக்கோட்டை. T. N. நாகலிங்கம் பிள்ளை, [illegible]
T. N. சொக்கலிங்கம் பிள்ளை, [illegible] சன்ஸ், மதுரை

நீதிபதி ஸ்ரீ பி. சோமய்யா, லாய்ட்ஸ் ரோட், ராயப்பேட்டை. 17 4—1940.

திருவண்ணாமலை, பரசுராம சித்த ஔஷதாலயத்தைச் சேர்ந்த டாக்டர் என். பரசுராமய்யரை எனக்கு 30 வருஷத்துக்கு மேலாகத் தெரியும். இத்தனை வருஷங்களாக அவர் சித்த வைத்தியத்தின் ரகசியங்களை கண்டு பிடிப்பதிலேயே தன் நேரத்தை எல்லாம் செலவிட்டு தன்னிடமிருந்த, பணத்தையெல்லாம் சித்த வைத்திய ரகசியங்கள் தெரிந்திருக்கக் கூடியவர்கள் என்று அவர் கருதினவர்களை அணுகி ஆராய்ச்சி செய்வதிலேயே செலவிட்டுள்ளார்.

இவ்வாறு நெடுநாளாக அநுபவங்கள் பெற்றபின் அவர் நல்ல ஊதியங் கிடைத்துவந்த ஒரு உத்தியோகத்தைவிட்டு வைத்திய சிகிச்சைத் தொழிலில் ஈடுபட்டார். 3 வருஷ காலத்திக்குள்ளாக அவர் நோயாளிகளுக்குப் பெரும் தொண்டு செய்துள்ளார்.

ட்யூபர் குலோஸிஸ் என்று சொல்லும் க்ஷயம், சீரிழிவு, ஆகிய இரண்டு வியாதிகள் விஷயத்திலும் இவர் பல மேனாட்டு வைத்திய நிபுணர்களின் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறார். சித்த முறை தைலங்கள், சருமம் (தோல்) சம்பந்தமான வியாதிகளின் சிகிச்சை இவ்விரண்டிலும் அவருக்கு விசேஷ கியாதி ஏற்பட்டிருக்கிறது.

(ஒப்பம்) பி. சோமய்யா, நீதிபதி, சென்னை, ஹைகோர்ட்.



நோட்டீசு

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

O. S. No. 70-1940

கும்பகோணம் கடலங்குடி தெரு, V. S. ராமஸ்வாமி அய்யங்கார் வகையரா—வாதிகள்.

மன்னார்குடி அக்கரைசேனித் தெரு, ராமசாமி செட்டியார் மகன் ம-ா-ா-ஸ்ரீ, கோவிந்தராஜலுசெட்டியார்-பிரதிவாதி.

பிரதிவாதிபேரில் பத்து வரவு கணக்குப்படி ரூ. 340-க்கு தாவாசெய்து 19-6-40ல் ஈறங்கி [illegible]ப்பட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி ஷெ கோர்ட்டில் ஆஜராக தவறினல் எக்ஸ்பார்ட்டி செய்து தீர்ப்புச் செய்யப்படும்.

(Sd.) S. Narayana Aiyar,
[illegible]

முத்துமாலை

பாரதமணியின் 26 முத்துகள் ஒன்றாக கோர்க்கப்பட்ட முதல் மூன்று மாலைகள் பைண்டு வால்யூம்களாக தயாராகி இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலையும் இரண்டே ரூபாய் தான். இன்றே உங்கள் மாலையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.




குழந்தைகளுக்கு கவலையற்ற கல்விப்பயிற்சி, பெண்ணின் விவாகம், ரம்மியமான இருப்பிடம், இன்பவாழ்க்கை, இவைகளை எல்லாம் கற்பக விருக்ஷம்போல் உங்களுக்கு அளிக்கத் தழைத்தோங்கி நிற்கும் ஸ்தாபனம்

## இந்தியன் மியூச்சுவல் லைப் அஸோஸியேஷன் லிமிடெட்.

டெலிபோன்

**10, மவுண்ட் ரோடு, .. ஸ்.**

*Chetty Stree*

குற்றமில்லாத
தோற்றத்திற்கு
மைசூர் சந்தண சோப்
பைப்போல் நல்லது
வேறொன்றுமில்லை

அதை உபயோகித்தால் சருமம்
வெண்மையாயும் மிருதுவாயும்
ஆகிறது.

**MYSORE**
*Sandal*
**SOAP**

**GOVT. SOAP FACTORY, BANGALORE.**



HEYCOCK CO.

## மைசூர் சந்தண சோப்.

# இந்தியன் பாங்க், லிமிடெட்.

(ஸ்தாபிதம்: **1907**)

*தலைமை ஆபீஸ்:*—சென்னை, வடக்கு பீச் ரோட்.

**லோகல் ஆபீசுகள்:**

| | | | |
|---|---|---|---|
| எஸ்பிளநேட் | : *பிராட்வே* | புரசைவாக்கம் : | புரசைவாக்கம் ஹைரோட் |
| திருவல்லிக்கேணி | : பெரிய தெரு | ராயப்பேட்டை : | பஜார் ரோட் |
| மைலாப்பூர் | : வடக்கு மாடவீதி | சௌகார்பேட்டை : | சைனு பஜார் ரோட் |
| தியாகராயநகர் | : *பிரகாசம் ரோட்.* | | |

**பிராஞ்சுகள்:**

அடோனி, ஆலப்பிழை, பெங்களூர், பெங்களூர் கண்டோன்மென்ட், பெஜவாடா, பம்பாய், கொச்சி, கோயம்பத்தூர், கொழும்பு, ஈரோடு, குண்டூர், காரைக்குடி, கும்பகோணம், மதுரை, புதுக்கோட்டை, கொல்லம், சேலம், திருநெல்வேலி, திருப்பூர், திருவாரூர், திருச்சூர், திருச்சினாப்பள்ளி, தூத்துக்குடி கள்ளிகோட்டை.

**சப் ஆபீசுகள்:** குடிவாடா, தெனாலி, பீமாவரம், ரேபள்ளி, தனுகு, துக்கிரிலா, நரசாராவ்பேட்டை, தேவகோட்டை, உடுமலைப்பேட்டை, மருதெரு.

லண்டன் நியூயார்க் ஏஜண்டுகள்: **நேஷனல் ஸிடி பாங்க் ஆப் நியூயார்க்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | **47,92,800** |
| கோரப்பட்டு, செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | **12,79,280** |
| ரிஸர்வ்களும், மற்ற நிதிகளும் | ரூ. | **17,92,762** |
| ஷேர் ஹோல்டர்களின் ரிஸர்வ் பொறுப்புகள் | ரூ. | **35,13 520** |
| **31—12—39**-ல் வொர்க்கிங் பண்டுகள் | ரூ. | **4,70,31,536** |

**N. கோபால அய்யர்,** *காரியதரிசி.*